ஸ்ரீபாண்டுரங்

Bhakthi Sangraham Mo

பக்த மாலிகை.

Tamil translation from Maratti

BY

MAHIPATHI BAVA

A GUID 69

TO

TAMIL READING 2.11

YOUNG (MEN AND WOMEN)

PUBLISHED BY

V. Srinivasa Row.

PRINTED AT THE ROOPERT AND CO. By at "Ruckma Press"
TRIPLICANE MADRAS, S.E.

1911.

Price per Series.] [3 Annas.

Q2
M11
171098

பாண்டுரங்கனுடைய
ும் பிரயோஜனார்த்தமாக
ழுக்கம், பக்தி உண்டாக்கத்
கொடுத்தும் அனுப்பியும் வரப்

வாறு சரித்திரங்கள் 180.

நாபாஜி சரித்தி
கர் ,,
தேவ் ,,
துளசிதாஸ் ,,
நாமதேவ் ,,
6. யாத்திரை ,,
7. விஷேர்பாகேசர் ,,
8. பாகவதர் ,,
9. பிதருபிராமணன் ,,
10. கமலாகார் ,,
11. தாதாசவுகார் ,,
12. ஞானதேவ் ,,
13. விடல் பண்டிதர் ,,
14. நிவர்த்திதேவ் ,,
15. சோபானுதேவ ,,
16. முக்தாபாயி ,,
17. விஷோபாசாடி ,,
18. சாங்கயோகி ,,
19. கூர்மதாஸ் ,,
20. சாவதமாலி ,,
21. ராகாகும்பர் ,,
22. கோராகும்பர் ,,
23. கபீர்தாஸ ,,
24. துளசி சாவுகார் ,,
25. பத்பநாபர் ,,
26. கபீர்பாரீயை ,,
27. கமால் ,,
28. தத்தவஜீவன் ,,
29. ஜகமித்திரர் ,,
30. சோகாபரமானந்தர் ,,
31. நரஹரி ,,
32. ஜனபாயி ,,
33. மத்சேந்திர நாதர் ,,
34. கோரக்கர் ,,
35. சௌகாமேளர் சரித்திரம்
36. ரோகிதாஸ் ,,
37. பிப்பாஜிராஜா ,,
38. சிநதடியார் ,,
39. ஏகநாதர் ,,
40. ஜனார்தன சுவாமி ,,
41. சந்திரபட்டர் ,,
42. சக்கிரபாணி ,,
43. கிருஷ்ணதாஸ் ,,
44. கன்னடதேசவர்த்தகர்
45. பரமஹம்சர் ,
46. துவாரகை பிராமணன்
47. காசிமஹாந்து ,,
48. ஹரிபண்டிகர் ,,
49. காவுபாபிராமணர் ,,
50. சமர்த்தராமதாஸ் ,,
51. சிவாஜிராஜா ,,
52. ஜயாராமர் ,,
53. தத்தாகாவிகர் ,,
54. ஷஹபூர் பிராமணன்
55. வேணுபாயி ,,
56. கங்காதர பண்டிதர்
57. பண்டரீ அந்தஜர் ,,
58. துகாராம சுவாமி ,,
59. விஸ்வம்பர் ,,
60. காமாபாயி ,,
61. துகாராம் ,,
62. பண்டாராவு ,,
63. வேஸாபாயி ,,
64. மம்பாஜி பண்டிதர் ,,
65. சிந்தாமணி ,,
66. பீடுதேச ஸாடா ,,
67. பரமேஸ்வர பட்டர்
68. பிதர்தேசி ,,

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

பக்தி சங்கிரகம்.

அக்கிரதாஸ் நாபாஜி சரித்திரம்.

ஸ்ரீ பாண்டுரங்கனுடைய பக்தர்களின் சரித்திரங்கள் பிரசித்தமாவதற்கு முன் நாபாஜியுடைய தாய் தந்தை மகா விரக்தர், வைஷ்ணவசிலர், அவர்கள் பஞ்சம் சகிக்கமாட்டாது தமது அதிபாலிய குழந்தை நாபாஜியை தனியே விட்டுப்போனார்கள். நாபாஜி பசி வேதனையாலும் தாய் தந்தையைக் காணாத வருத்தத்தாலும் அழுதுகொண்டு வீதியோடு போவதை ஸ்நானம் செய்துவரும் அக்கிரதாஸர் கண்டு, அப்பா நீ எதற்காக அழுகிறாய் என்று கேட்க, சுவாமி, தாய் தந்தை என்னைப் பசியால் பரிதபிக்கவிட்டார்கள், நான் பசி பொறுக்காது அழுகிறேன் என்று சொல்லக் கேட்ட அக்கிரதாஸர் பரிதபித்துக் குழந்தையை அழைத்துக்கொண்டு தமது கிரகம் சென்று நாயகியை நோக்கி நமது கிரகத்தில் எல்லோரும் சாப்பிட்டு மிகுந்த உச்சிஷ்டத்தை இந்தக் குழந்தைக்கு இடுவென்று ஆக்ஞாபித்தார். அதுமுதல் நாபாஜீ சாதுக்களுச்சிஷ்டம் சாப்பிட்டு வளர்ந்துவர, அக்கிரதாஸ் நாபாஜியுடைய குலகோத்திரம் இன்னதென்றறியாததினால் அவரைத் தமது கிரகத்தில் வைத்துக்கொள்ள மனமில்லாது பக்கத்தில் ஓர் குடிசை ஏற்படுத்தி அதில் அவரைத் தங்கியிருக்கச்செய்தார். நாபாஜி குடிசைக்குள்ளிருந்துகொண்டு பிரதிதினம் அக்கிரதாஸருடைய பூஜைகிரகம் பார்த்தவண்ணம் பகவானுடைய திவ்ய அலங்காரசேவையும் சாதுக்கள் தரிசனமுஞ்செய்து உச்சிஷ்டம் உட்கொண்டு ஆனந்தமாக காலங்கழிக்க, சாதுக்களுச்சிஷ்டம் நாபாஜி உதிரத்தில் சேரச்

சேர உச்சிஷ்டமகிமையால் நாபாஜியுடைய மகிமை அதிகரித்து திரிகாலஞானியாக விளங்கினார். ஒருநாள் அக்கிரதாஸர் பூஜை கிரகத்தில் தனியாக ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைத் தியானித்து மானச பூஜை செய்ய, தியானத்தில் பிரசன்னமாகும் பகவான் அன்று பிரசன்னமாகாததைக்கண்டு இதென்ன ஆச்சரியம் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி இன்று பிரசன்னமாகாத காரணம் தெரியவில்லையே, எங்கு ஓடி ஒளிந்தனரோ என்று வியாகூலப்பட, வெளியிலிருந்த நாபாஜி, சுவாமி! சமுத்திரத்தில் ஓடம் ஒன்று முழுகும்படியான அபாயத்திலிருக்கிறது, ஓடத்துக் குடையவன் ஓடம் சரியான நிலைமையில் நின்றால் தேவரீருடைய மடத்துக்கு ஓடத்திலிருக்கிற திரவியத்தில் பாதி கொடுப்பதாகப் பிரார்த்தித்தானாதலால் பகவான் அந்த ஓடத்தை நிலைநிறுத்தப்போயிருக்கிறார், இதோ வந்துவிடுவார் என்று சொன்னதைக்கேட்ட அக்கிரதாஸர் ஆச்சரியப்பட்டு மறுபடி கண்ணை மூடிக்கொண்டு தியானிக்க, பதினாலு லோகத்தையும் குக்ஷியில் அடக்கிய நீலமேகசியாமளன், மாயாசொரூபி ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி தேகம் முழுவதும் ஜலம் சொட்ட நனைந்த பீதாம்பரத்தோடு அக்கிரதாஸருடைய தியானத்தில் பிரசன்னமானார். அப்போது அக்கிரதாஸர் நாபாஜியை அழைத்து அப்பா, பகவான் சமுத்திரத்திற்குச்சென்று ஓடத்தை அபாயத்திலிருந்து காத்து இரக்ஷித்த விருத்தாந்தம் உனக்கெவ்விதம் தெரிந்தது என்று கேட்க, சுவாமி, சகலமும் தேவரீருடைய கிருபை, சத்சாதுக்களுடைய உச்சிஷ்டப்பிரசாதத்தின் மகிமை என்றார். அக்கிரதாஸ் மிகச் சந்தோஷமடைந்து நாபாஜியை நோக்கி சத் சாதுக்களாகிய பக்தர்களின் திவ்ய சரித்திரங்களை சகலரும் தெரிந்து கிருதார்த்தர்களாகும் வண்ணம் எழுதிப்பிரசித்தப்படுத்தும் என்று ஆக்ஞாபிக்க, நாபாஜி அக்கிரதாஸருடைய ஆக்ஞையை சிரமேற்கொண்டு பக்தர்களின் சரித்திரங்கள் யாவும் எழுதிமுடித்தனர்.

புண்டரீகர் சரித்திரம்.

பூவைகுண்டமாகிய பண்டரீ க்ஷேத்திரத்தில் ஜத்துவா என்று ஓர் விப்பிரச்சிரேஷ்டர் தமது பாரியை சாத்தியகியோடு சம்சாரம் நடத்திவர, அவர்களுக்குப் புத்திரவாஞ்சையுண்டாகி ஸ்ரீஹரியைத் தியானித்து வந்தார்கள். பகவானுடைய கிருபையால் புத்திரசந்தானமுண்டாகிக் குழந்தைக்குப் புண்டரீகர் என்று நாமகரணம் செய்து மிகச்செல்வமாக வளர்த்து எட்டாம் வயதில் உபநயனம், பதினோறாவது வயதில் விவாகமுமுடித்தனர். பின்பு சிறிது காலத்திற்குள் அவர் தமது சகிவாக்கியத்தை வேத வாக்கியமாகக்கொண்டு மிக துர்புத்திக்குள்ளாகி பெற்றோர்களை தூஷிக்கிறதும் சம்ரக்ஷணைக்குறைவாக நடத்துகிறதுமாய் மிகுந்த உபத்திரவஞ் செய்யத் தலைப்பட்டார். அவர்கள் புண்டரீகருடைய உபத்திரவம் சகிக்காது தேசாந்திரம் சென்றாகள். பிறகு புண்டரீகர் கைப்பொருள் யாவும் சிலவழித்து ஜீவனத்திற்கு மார்க்கமில்லாது ஐயோ சதி வாக்கியங் கேட்டு மாதா பிதாவை பரதவிக்கவிட்டேனே, அவர்கள் உபத்திரவம் பொறுக்காது தேசாந்திரஞ் சென்றார்களே, அவர்கள் சபித்துப்போனார்களோ, அந்தச் சாபத்தால் இவ்வித அனர்த்தம் சம்பவித்ததோவென்ற வியாகூலத்தோடு தமது பாரியையை நோக்கி, ஹே சகி நான் உன் வார்த்தை கேட்டுக்கெட்டேன், எனது பெற்றோர்களை இழந்தேன், இனி எனது தாய் தந்தையை எங்கு காண்பேன், எங்கு தேடுவேன், என் பெற்றோர்களைப்போல சத்சீலருண்டோ! மகா சாதுக்களாயிற்றே, அவர்களைச் சமீபத்தில் வைத்துக்கொண்டு சிஸ்ருஷைசெய்து இகபர சாதனம் அடையாமல் போனேனே, மகாபாவியானேனே, இனி நான் எங்கு தேடிப்போவேன், பெற்றோர்களைத் தேடிப்பிடித்து உபசரித்தழைத்து வந்து சிஸ்ருஷை செய்து அவர்களுடைய ஆசீர்வாதம் பெறும்படியான பாக்கியமடைவேனோ என்று

பெற்றோர்களைத் தேடிச்சென்று கங்கைசேர்ந்து பெற்றோர்களைக்காணுது முன்சென்று, மார்க்கத்தில் குக்குட முனிவர்ஆஸ்ரமம் சேர, அர்த்தராத்திரி வேளையில் மூன்று ஸ்திரீகள் குடத்தில் ஜலம் எடுத்துக்கொண்டு முனிவர் ஆஸ்ரமம் நோக்கிச்செல்லுகிறதைப்பார்த்து தெய்வரம்பையோ, இந்திராணியோ, அப்ஸரஸ்திரீகளோ, யாரோ தெரியவில்லையே, இங்கு வந்து சிஸ்ரூஷை பண்ணக் காரணமென்னவென்று யோசித்துச் சமீபம் சென்று அம்மணி நீங்கள் யார் என்று கேட்க, அப்பா நாங்கள் மூவரும் முறையே யமுனை, சரஸ்வதி, பாகிரதி, நாங்கள் பூர்வ கர்மவசத்தால் நேர்ந்த பாவம் குக்குடமுனிவருக்குச் சிஸ்ரூஷை செய்து நிவர்த்தித்துக்கொள்ள வந்தவர்கள் என்று சொல்லி ஆஸ்ரமம் நோக்கிச்செல்ல, புண்டரீகர் அவர்களை நோக்கி அம்மா தீனனுகிய என் கதியென்ன? சம்சாரமென்கிற கும்பியில் அவஸ்தைப்படுகிற நான் நற்கதியடைய மார்க்கம் சொல்லிப்போகலாகாதா என்றார். அவர்கள் புண்டரீகரை நோக்கி அப்பா நீ பக்தியோடு மாதாபிதாவுடைய சிஸ்ரூஷை நடத்திவந்தால் இகபரமிரண்டிலும் உத்தம பதவி அடையலாம் என்று ஆஸ்ரமம் சென்றனர். புண்டரீகர் மாதா பிதாவைக் கண்டு ஆலிங்கனம்செய்து திவ்ய தேசங்கள் தோறும் யாத்திரை செய்வித்து பண்டரீ சேர்ந்தனர். ஒரு நாள் புண்டரீகர் மாதா பிதாவுக்குச் சிஸ்ரூஷை நடத்த ஸ்ரீகிருஷ்ணன் ருக்மணி சமேத புண்டரீகர் சிஸ்ரூஷை செய்யுமிடம் வந்து நிற்க, நிற்கின்ற பகவானுக்கு ஓர் செங்கல்கொடுத்து ஹே நாதா தீனபந்து இந்தச் செங்கல் மேல் எழுந்தருளும், சிஸ்ரூஷை செய்து வருகிறேன் என்று சொல்லி அவர்களுக்குச் செய்யவேண்டிய சிஸ்ரூஷையாவும் செய்துமுடித்துப் பக்கத்தில் நிற்கின்ற பகவானை ஆலிங்கனம் செய்து பிரதக்ஷண நமஸ்காரஞ்செய்து நிற்க, பகவான் புண்டரீகரை ஆசீர்வதித்து மாதாபிதாவுக்குச் சிஸ்ரூஷை செய்வதில் உன்னைப்போலொருவருமில்லை, உனது சிஸ்ரூஷையைக் கண்டு மெச்சினேன், ஆனந்தமடைந்தேன், உனக்கு என்ன வரம் வேண்டும் கேள் என, புண்டரீகர் ஆனந்தக்கண்ணீர் பெருக

விட்டுத் தேகம் பூரித்து ஹேபக்த பராதியானி, தீனபந்து தேவரீர் இவ்விடத்திலேயே எழுந்தருளவேண்டும், எனக்குச் சதா தரிசனம் கொடுக்கவேண்டுமென்று கேட்பதைவிட நான் வேறு வரம் என்ன கேட்கப்போகிறேன், வேறு என்ன வரம் வேண்டியிருக்கிறதென்று சொல்ல, பகவான் கபடநாடக சூத்திரதாரி, மந்தகாசத்துடன் அப்பா உனதிஷ்டப்படி நான் இவ்விடத்திலேயே சான்னித்தியமாகிறேன் என்று புண்டரீகர் கொடுத்த செங்கல்லின்மேல் நின்றுவிட்டார். அது முதல் அனந்தகோடி பக்தர்கள் வந்து தரிசனஞ்செய்ய "ஸ்ரீபாண்டுரங்கவிட்டல்" எனப் பெயர் வகித்து புண்டரீகருக்காகவே இவ்விடத்தில் சான்னித்தியமானேனென்று பிரசித்தப்படுத்தி அந்த க்ஷேத்திரத்திற்கு பண்டரீபுரம் என்று பெயரிட்டு மிகப்பிரசித்தமாக விளங்குகிறார்.

முற்றிற்று.

ஜயதேவ சரித்திரம்.

ஜகன்னாதம் என்னும் ஒருக்ஷேத்திரமுண்டு. அந்த க்ஷேத்திரத்திற்குச் சமீபம் தீந்துபில்வம் என்னும் கிராமத்தில் விசுவேசுவரர் என்று ஒரு பிராமணோத்தமரிருந்தார். அந்தப் பிராமணன் தனக்குச் சகல பாக்கியமிருந்தும் புத்திரபாக்கியமில்லாமையைக்குறித்து மிகவும் விசனமடைந்து சாக்ஷாத்லோகநாதராகிய கிருஷ்ணபகவானைக் குறித்துக் கடின தபசு செய்தார். அப்போது பகவான் அவருக்குப் பிரசன்னமாகி அப்பா விஸ்வேசுவரா உனது தபசை மெச்சினேன், உனக்கு என்ன வரம் வேண்டும் கேள் என்று சொல்ல, பிராமணன் பகவானைப் பிரதக்ஷண நமஸ்காரஞ் செய்து சுவாமி எனக்குத் தேவரீருடைய அநுக்கிரகத்தால் சகலபாக்கியமுமிருக்கிறது, புத்திரபாக்கியம் மாத்திரம் உண்டாகும்படி அநுக்கிரகம் செய்யவேண்டுமென்று

பிரார்த்தித்தார், அதைக்கேட்ட பகவான் விசுவேசுவரரைப் பார்த்து அப்பா உனது மனேபிஷ்டப்படி வியாசருஷியானவர் உலக நன்மைக்காக உனக்குப் புத்திரராக அவதரிக்கப் போகிறூர் என்று சொல்லி அந்தர்த்தியானமானூர். சிறிது நாள் சென்றபிற்பாடு வியாசர் பகவானுடைய ஆக்ஞையின்படி விசுவேசுவரர் என்கிற பிராமணனுக்குப் புத்திரராக அவதரிக்க, அவருக்கு ஜயதேவர் என்று நாமகரணஞ்செய்து மிகச் செல்வமாக வளர்த்து ஏழாவது வயதில் உபநயனஞ் செய்து வித்தியாப்பியாசம் செய்விக்காமலிருந்து விட்டார்கள். பிறகு அவர் ஒரு ஆசாரியுரைத் தனக்குக் குருவாகக்கொண்டு சகல சாஸ்திரங்களும் கற்றுணர்ந்தவராய் அநேக நக்ஷத்திரங்களுக்கு மத்தியில் சந்திரனைப்போலவும், பசுக்கூட்டத்திற்கு மத்தியில் கிருஷ்ண பரமாத்மா போலவும் ஜயதேவர் என்னும் பெயர் பெற்றுப் பிரசித்தமாக விளங்கினர். இவ்விதமிருக்கையில் ஜயதேவர் சகல சாஸ்திரங்களுக்கும் ஸ்மிருதி புராணங்களுக்கும் சம்மதமாய் கலியுகத்தில் கிருஷ்ணபகவானுடைய சரித்திரத்தைத்தவிர வேறொன்றும முக்திசாதனம் தரத்தக்கதல்ல என்று தெரிந்து கோகுல பிருந்தாவனத்தில் கோவிந்த கீதை என்னும் ஒரு கிரந்தம் செய்தருளினர். அந்தக் கிரந்தத்தைச் சகல வித்வத் ஜனங்களும் அங்கீகரித்துப் பாராயணஞ் செய்யத் தலைப்பட்டார்கள். அப்போது ஜகன்னாதத்தில் அரசாண்டு கொண்டிருந்த சாத்தி என்னும் பெயருடைய அரசன் சற்று அகம்பாவ மடைந்தவனுய் ஜயதேவர் செய்த கிரந்தத்திற்கு ஒப்பாகத் தானும் ஒரு கிரந்தஞ் செய்து சகல ஜனங்களாலும் அங்கீகரிக்கப்படவேண்டுமென்று விரும்பினவனுய் அந்தக் கிரந்தத்தை எல்லோருக்கும் காண்பித்து இந்தக் கிரந்தத்தை நீங்கள் எல்லோரும் அங்கீகரித்துப்பாராயணஞ்செப்பவேண்டும் என்றான். அதைக் கேட்ட ஜனங்கள் ஆச்சரியப்பட்டு ஹேராஜா ஜயதேவர் ஸ்ரீ கிருஷ்ணனுடைய லீலா விநோதங்களைப்பற்றி கிரந்த மூலமாய் வர்ணித்திருக்கிறது போல நானும் வர்ணித்திருக்கிறேன், அதை நீங்கள் எல்லோரும் அங்கீகரித்துப் பாராயணம்செப்பவேண்டு

மென்று சொல்லுகிற வார்த்தையானது ஸ்ரீமந்நாராயண மூர்த்திக்கு ஏற்குமா? எங்களைப்போலொத்த சாமான்னிய உலகத்தவர்களுக்கே ஏற்காமலிருக்கும்போது சாக்ஷாத்காரனுக்கு எவ்விதம் ஏற்குமென்று சொல்லி ராஜாவுடைய கிரந்தத்தை அங்கீகரிக்காமல் ஜயதேவர் கிரந்தத்தை அவரவர்கள் பாராயணஞ் செய்கிறதும், கீதங்களாகப் பாடுகிறதும், இன்னும் பற்பலவிதமாக ஸ்தோத்திரஞ்செய்து ஆனந்த பரிதாளாயிருந்தார்கள். இவ்விதமிருக்கையில் வித்வத் சிரேஷ்டர்களாலும் மற்றுமுள்ள ஜனங்களாலும் சொல்லப்பட்ட வார்த்தைகளைக்கேட்ட ராஜன் ஹே வித்வத் சிரேஷ்டர்களே ஜயதேவர் கிரந்தத்தை அங்கீகரித்துக்கொண்டு நான் செய்த கிரந்தம் சாமானிய ஜனங்களுக்கே ஏற்காமலிருக்கும்போது ஸ்ரீமந்நாராயண மூர்த்திக்கு எவ்விதமேற்குமென்று சொன்னீர்களல்லவா! இப்போது நாங்கள் இரண்டுபேர்களும் செய்த கிரந்தங்களை ஜகன்னாதனுடைய சந்நிதியில் வைத்து எந்தக் கிரந்தம் பகவானுக்குச் சம்மதமாயிருக்குமோ பார்ப்போமென்றான். அதற்கு ஜனங்களெல்லோரும் சம்மதித்து அன்றிரவில் இரண்டு கிரந்தங்களையும் ஜகன்னாதசுவாமி சந்நிதியில் வைத்துக் கோவில் கதவு பூட்டி முத்திரையிட்டுத் திரவுகோலை இராஜன் கையில்கொடுத்து வீடு சேர்ந்தார்கள். மறுநாள் காலையில் இராஜனும் மற்றுமுள்ள ஜனங்களெல்லோரும் கோவிலுக்குப் போய் கதவைத்திறந்து பார்க்க, ஜயதேவருடைய கிரந்தம் எம்பெருமானுடைய திருவடியிலும் ராஜாவுடைய கிரந்தம் கோவிலுக்கு வெளியிலும் கிடக்கிறதைப் பார்த்து நிரம்பவும் ஆச்சரியப்பட்டு சிலர் ஜயதேவருடைய கிரந்தத்தைக் கையிலெடுத்து இந்தக் கிரந்தத்திற்குச் சமானமாக வேறொன்றையும் சொல்லக்கூடாது என்பாரும், சிலரிந்தக் கிரந்தம் ஜயதேவர் வடிவம் என்பாரும், சிலர் இந்தக் கிரந்தமே ஜகன்னாதசுவாமி என்பாரும், அவரவர்கள் மனதுக்குத் தோன்றியபடி சொல்லித் தலையில் வைத்துக் கொண்டு கூத்தாடுகிறதும், பாடுகிறதும், மெய்மறந்து ஆனந்தக் கண்ணீர் பெருகவிடுகிறதுமாய் தேகம் பரவசமானவர்களாய்

ஹே ராஜன் தோகையை விரித்துக்கொண்டு ஆடுகிற மயிலைப் பார்த்த வான்கோழி தானும் தன்னுடைய அவலக்ஷணமுள்ள சிறகை விரித்தாடுகிறது போலவும் காகமானது கொக்கை போல் தானும் வெண்மையாக முயலுவதுபோலவும், நீர் உம்முடைய கிரந்தத்தை ஜயதேவருடைய கிரந்தத்துக்குச் சமானமாகச் செய்யமுயலுகிறீர், அது ஒருக்காலும் நடக்கமாட்டாது, உம்முடைய கிரந்தத்தை அன்னியர் புகழவேண்டுமே தவிர நீரேபுகழ்ந்துகொள்ளுகிறது எவ்விதமிருக்கிறதென்றால் உம்முடைய பாதத்தை நீரே குனிந்து நமஸ்காரம் பண்ணி நிமிர்ந்து வாழ்த்திக்கொள்ளுகிறது போலிருக்கிறதேயொழிய வேறில்லை என்றார்கள். அதைக்கேட்டராஜன் துக்கசாகரத்தில் முழுகினவனாய் ஹேபக்தவத்ஸலா, ஆபத்பாந்தவா, அனாதரக்ஷகா, தேவகீ நந்தனா, துரியோதனன் சபையில் துரௌபதியைக் காத்து இரக்ஷித்த அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகா என்னை இரக்ஷியும், பக்தபராதீனன் என்கிற உம்முடைய நாமமானது நிச்சியமாகயிருந்தும் என் விஷயத்தில் பொய்யாகிவிட்டதே, பூலோகத்தில் சகல ஜீவராசிகளுக்கும் மாதா பிதாவாயிருக்கப்பட்ட உமக்கு விவேகமானபிள்ளை என்றும் மூடப்பிள்ளை என்றுமுண்டோ? வருஷிக்கிற மழைக்கு நெல் பயிரென்றும் புல்லென்றுமுண்டோ? சர்வாந்தர்யாமியாயிருக்கப்பட்ட உமக்கு எல்லாருஞ் சரிதானே; அப்படியிருக்க ஜயதேவர் செய்த கிரந்தத்தை அங்கீகரித்து நான் செய்த கிரந்தத்தை நிக்கிரகித்ததினால் இனி என்னுடைய பிராணனை வைத்திரேன் ஹே பாண்டுரங்கா, ஜனார்த்தனா, வாசுதேவா, இந்தச் சமயத்தில் என்னை இரக்ஷியாமல் போனால் இப்பொழுதே என்னுயிரை மாய்த்துக் கொள்ளுகிறேனென்று கத்தியை உருவி ஓங்கி வெட்டிக்கொள்ளுந் தருணத்தில், தீனதயாளுவும், பக்தவத்ஸலனுமாயிருக்கப்பட்ட ஸ்ரீ பாண்டுரங்கன் உடனே பிரசன்னமாகி ஹே ராஜா உனது கிரந்தத்தில் முப்பத்திரண்டு சுலோகத்தை ஜயதேவர் செய்த கிரந்தத்துடன் சேர்த்துவிட்டேனென்று சொல்லி அந்தர்த்தியானமானார்.

இவ்விதமிருக்கையில் ஜகன்னாதக்ஷேத்திரத்தில் மகா ஐசுவரியமுள்ளவராயும் சதுர்சாஸ்திர பண்டிதராயும் சோமனாதர் என்னும் பெயருடைய ஒரு பிராமணோத்தமரிருந்தார். அவருக்கு வெகு காலமாகச் சந்ததியின்றி அந்திகாலத்தில் அழகே வடிவமாக பிறந்தாற்போல் ஒரு பெண் பிறந்தது. அந்தப்பெண்ணின் நேத்திரம் கமலம் போலிருந்தமையால் பத்மாவதி என்று நாமகரணஞ் செய்து நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்து வந்தார்கள். அந்தப் பெண்ணினுடைய ரூபலாவண்ணியத்தைப்பார்த்து இந்தப்பெண்ணுக்கு சாக்ஷாத்மகாவிஷ்ணுவே பர்தாவென்று நிச்சயித்துப் பெண்ணை யார் கேட்டாலும் கிருஷ்ணார்ப்பணமாகிவிட்டதென்று சொல்வார்கள், பத்மாவதி என்கிற பெண்ணோ வளர் பிறை சந்திரனைப் போல் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிற போது ஜகன்னாத சுவாமி இனி நாம் சும்மாயிருக்கலாகாதென்று பிராமணனுடைய சொர்ப்பனத்தில் சேவை சாதித்து ஹே பிராமணா உமது பெண்ணை எனக்கு அர்ப்பணஞ் செய்வதற்குப் பதில் என் அம்சமுடைய ஜயதேவரென்று ஒரு விப்பிரரிருக்கிறார், அவருக்கு உம்முடைய பெண்ணை கன்னிகாதானம் செய்து கொடுத்தால் எனக்குச் சந்தோஷமாயிருக்குமென்று சொல்லி மறைந்தார். பிராமணன் கண்ணை விழித்துப்பார்த்து ஆனந்தமடைந்துத் தன்னுடைய பெண்ணை அழைத்து அம்மா ஜயதேவருக்கு உன்னை விவாகஞ் செய்து கொடுக்கும்படி ஸ்ரீமந்நாராயணமூர்த்தி சொர்ப்பனத்தில் சொல்லிப் போனார், உனது மனோபீஷ்டமென்னவென்று கேட்டார், அதற்கு பத்மாவதி சம்மதித்தவள் போல தலை குனிந்து மௌனமாயிருந்தாள், விசுவேசுவரர் பத்மாவதி சம்மதம் கேட்டு மிகச் சந்தோஷமடைந்து பகவான் நமது பெண்ணுக்குத் தகுந்த வரன் சம்பாதித்து கொடுத்தாரென்று ஆனந்தமடைந்து பத்மாவதி அம்மாளுக்கும் ஜயதேவருக்கும் நல்ல சுபமுகூர்த்தத்தில் மங்கள ஸ்நானஞ் செய்வித்து இரண்டு பேர்களையும் அலங்கரித்து மணவரையில் உட்காரவைத்து அந்

தணர்கள் வேத கோஷஞ் செய்யவும் பிராமண ஸ்திரீகள் மங்களம் பாடவும் மேளவாத்தியம் முழங்கத் திருமாங்கிலியதாரணம் செய்வித்தார்கள். தேவாதி தேவாகள் ஆனந்தமடைந்து புஷ்பம் வருஷித்தார்கள்.

பிற்க, ஒருநாள் ஜீவகாருண்ணியமும் தெய்வ பக்தியும் பிராமணவிசுவாசமும், பிதுர்க்கள் பக்தியும், தெளிவைத்தருகிற வேதாகமசாஸ்திரங்களிடத்தில் நம்பிக்கையுமுடைய ஒரு வர்த்தகன் ஜயதேவசுவாமியிடம் வந்து சரணமடைந்து சுவாமி வெகு நாளாகத் தேவரீருடைய தரிசனத்திற்குக் காத்துக்கொண்டிருக்கிற எனக்கு இன்றைக்கு சித்தியாச்சுது, வெகு தன்னியனுனேன், எனக்கு உபதேசஞ் செய்து கிருபை பண்ணவேண்டுமென்று பிரார்த்தித்தான். ஜயதேவர் அவன் மேல் கிருபை கூர்ந்து உபதேசம்பண்ணினுர். பிறகு அந்த வர்த்தகன் சாது சங்கமில்லாமல் தயை, தாக்ஷிண்யம், ஞானம், பகவத் பக்தி, உதாரத்துவம், தீரத்துவம், சாந்தம், நிஷகர்மபுத்தி, அஷ்டாங்க யோகம் முதலான நற்குணங்கள் உண்டாகமாட்டாதென்று எண்ணி ஜயதேவசுவாமியை தான் இறங்கியிருக்கிற வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய் மிகுந்த உபசாரத்துடன் வைத்திருந்துத் தனது ஜன்மம் கடைத்தேறும்படியாகச் செய்யவேண்டுமென்று பிரார்த்திக்க, அவ்விதமே ஜயதேவசுவாமி கிருபை செய்தருளினுர். உடனே வர்த்தகன் ஜயதேவரை தன் ஊராகிய பண்டராபுரத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் பாகவத கைங்கரியம் முதலானவைகளால் உபசரித்து அவருடைய கீர்த்தனங்களை பக்தி விசுவாசத்தோடு தினந்தோறும் பாராயணம் செய்கிறதுமல்லாமல் மற்றுமுள்ள ஜனங்களுக்கும் உபதேசஞ் செய்விக்க, அவர்களும் கீதங்களை சிரவணம் செய்து ஆனந்தக் கண்ணீர் பெருக வாழ்த்தினுர்கள். ஜயதேவசுவாமிகள் வாத்தகனிடத்தில் ஒரு மாதமிருந்து பிறகு தான் ஜகன்னுதத்திற்கு போகவேண்டுமென்று சொல்ல வர்த்தகன் அவருக்குச் சோட

சோபசாரத்துடன் பூஜை முதலானது பண்ணிச் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து பகவத் பக்தியானது என் மனதிலிருந்து எப்போதும் நீங்காமலிருக்கும்படியாகவும் சதாகாலமும் உம்முடைய ஸ்மரணையே செய்துகொண்டிருக்கும்படியாகவும் என்னை ஆசீர்வதிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தான். அவ்விதமே ஜயதேவர் அந்த வர்த்தகனுக்கு ஆசீர்வாதஞ்செய்து ஜகன்னாதத்திற்கு புறப்பட எத்தனமானார். அப்போது வர்த்தகன் ஜயதேவசுவாமிகள் தம்முடைய சுதேசமாகிய ஜகன்னாதத்திற்குப் போகிறபடியால் அவருக்குக் காணிக்கை முதலானது கொடுத்தனுப்பவேண்டுமென்று நினைத்து “இவரோ நிரபேக்ஷகர் பொன்னையும், மண்ணையும் சமனாக நினைக்கிறவரார்ச்சுதே” நாம் எவ்வளவு திரவியம் காணிக்கை கொடுத்தாலும் பெற்றுக்கொள்ள மாட்டாரே, இதற்கென்ன செய்யலாமென்று உத்தேசித்தவனாய் நாம் இவருக்குத் தெரியாமல் ஒரு இரதம் தயார் செய்து அதில் சிறிது திரவியம் காணிக்கை வைத்து ஜயதேவருடைய பத்னியாகிய பத்மாவதி அம்மாளிடம் சேர்ப்பிக்கும்படி செய்யலாமென்றெண்ணி ஒரு இரதம் தயார் செய்து அதில் சிறிது திரவியம் வைத்து இரண்டு வேலைக்காரர்களை அழைத்து அப்பா இரதத்தில் ஜயதேவருக்குத் தெரியாமல் சிறிது திரவியம் வைத்திருக்கிறேன், நான் இரதத்தில் வைத்திருக்கிற காணிக்கை ஜயதேவருக்குத் தெரியாது, நீங்களிருவரும ஜயதேவரோடு ஜகன்னாதம் போய் இரதத்திலிருக்கிற திரவியத்தை அவருக்குத் தெரியாமல் பத்மாவதி அம்மாளிடம் ஒப்பித்து வாருங்களென்றான். வேலைக்காரர்களிருவரும் கபடவேஷக்காரர்களாதலால் அதிலொருவன் நான் பராதீனன், என் வீட்டில் வேலையிருக்கிறது, நான் போகமுடியாது என, மற்றொருவனும் அவ்விதமே தான் தப்பித்துக்கொள்ளும்படியான மார்க்கம் சொல்லி வீட்டுக்குப்போகிறவர்கள் போல ஜாடைகள் செய்து ஜயதேவர் எப்போது புறப்படப்போகிறார், நாம் எப்போது இரதத்திலிருக்கிற திரவியம் திருடிக்கொண்டு போவோமென்று காத்துக்கொண்டி

ருந்தார்கள். பிறகு வர்த்தகன் ஜயதேவரோடு சற்று தூரம்வரையில் போய் வழி விட்டுத் திரும்பி வீட்டிற்கு வந்து சேர்ந்தான். ஜயதேவர் தனியாக இரதத்தை நடத்திக்கொண்டு போக மார்க்கத்தில் காடு அடர்ந்த சந்துக்கட்டான இடம் பார்த்து அந்த இரண்டு வேலைக்காரர்களாகிய திருடர்கள் இரதத்திற்குச் சமீபம் நெருங்கினார்கள். அப்போது ஜயதேவர் இரண்டு பேர்களையும் பாாத்து ஓகோ இவர்கள் திருடர்கள் என்று அறிந்து இரதத்திலிருக்கிற திரவியம் உங்களுக்கு வேண்டியவரையில் எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லி அவர்களை நோக்கி ஹே சுவாமிகளே தேவரீரை வர்த்தகன் கிரகத்திலேயே பார்த்தேன், அந்தச் சமயம் இரதத்திலிருக்கிற திரவியத்திற்கு நீங்கள் ஆசைப்படுகிறதாக எனக்குத் தெரியவில்லை, நான் அபராதியானேன், நான் அறியாமல் இரதம் நடத்திக்கொண்டு வந்து விட்டேன், தேவரீரை வெகு தூரம் கால் கடுக்க நடக்கச் செய்தேன், நான் செய்த அபசாரம் பொறுத்து இரக்ஷிக்கவேண்டுமென்று பிரார்த்தித்துச் சுவாமிகளே, இதோ இரதம் நிறுத்திவிட்டேன், அதிலிருக்கிற திரவியம் உங்களுடையதாயிருக்கிறது, எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லி இரதம் விட்டு இறங்கி முன்னே நடந்தார். உடனே அந்த வேலைக்காரர்களாகிய திருடர்கள் இரதத்திலிருக்கிற திரவியம் எடுத்துக்கொண்டதல்லாமல் நாம் இவரை சும்மா விட்டுவிட்டால் வர்த்தகனிடம் சொல்லி நம்மை சிக்ஷை செய்வார், ஆகையால் நாம் இவரை கொலைசெய்வது நலமென்று ஒருவன் சொல்ல. மற்றொருவன் அப்பா வேண்டாம், இவரோ மஹான், சத்சீலர், அவருடைய முகார விந்தம் பார்த்த மாத்திரத்தில் அவரைக் கொலை செய்ய மனம் துணியவில்லை, சரீரம் நடுங்குகிறது, நாம் இவரைக் கொல்வதால் என்ன பிரயோஜனமடையப்போகிறோம் என்று சொல்லி முன்னே போகிறவரைப் பிடித்து இரண்டு காலையும் கையையும் வெட்டி பாழுங்கிணற்றில் தள்ளிப் போய் விட்டார்கள்.

அந்தச் சமயம் விஞ்ச தேசத்து அரசன் இரதகஜ துரக பதாதிகளோடும் பந்துக்களோடும் சிநேகிதர்களோடும் வேட்டை மார்க்கமாக வந்து வேட்டையாடிக் களைத்துத் திரும்பிப் போகும் தருணத்தில் சூரியன் அஸ்தமனமாய் இருளடைந்து வனத்தில் வழி தெரியாமல் திகைத்து அன்று இரவில் அவ்வனத்தில் தங்கியிருக்க நேரிட்டு, அவ்விடத்தில் ஓர் விடுதி நிர்மாணித்துக்கொண்டு அன்று இரவு முழுதும் மிகக் களிப்புடன் காலங்கழிக்க உத்தேசித்து மந்திரிகளோடு சாப்பாடு முதலானது செய்து தாம்பூலம் தரித்து வேடிக்கையாக பேசிக்கொண்டிருக்கையில் வடதிசையில் ஒரு வெளிச்சம் கண்டான். அரசன் அதோ தோன்றுகிற வெளிச்சம் இன்னதென்று தெரியவில்லையே, மேலும் அந்த வெளிச்சமோ சாமான்னியமாகக் காணப்படவில்லையே, கோடி சூரியப் பிரகாசம் போலிருக்கிறதே, நாமெல்லோரும் போய் அதைப்பார்த்து வருவோம் வாருங்களென்றான். உடனே எல்லோரும் புறப்பட்டுப் போய்ப் பார்க்கும் போது ஜயதேவர் பகவத் பக்தி உடையவராய் சில வேளையில் கிருஷ்ணா, கோவிந்தா என்று நாமஸ்மரணை செய்கிறதையும், சில வேளையில் அழுகிறதையும், ஆனந்தக்கண்ணீர் பெருக விடுகிறதையும் பார்த்து ஆஹா இவர் யாரோ மஹான், கண்ணை மூடிக்கொண்டு நிஷ்டையிலிருக்கிறார், ஆஹா மந்திரி அவர் முகாரவிந்தத்தின் தேஜஸ்ஸை பார்த்தாயா? என்ன வடிவம், அவர் முகத்தைப் பார்த்தமாத்திரத்திலேயே எனது தேகம் பூரிக்கிறது; ஆனந்தமுண்டாகிறது, தேகஸ்மரணை தவறுகிறது, ஹா மந்திரி இங்கிருக்கிறவர் இன்னாரென்று தெரியவில்லையே, அவர் கால், கை துண்டிக்கப்பட்டிருக்கிறதே, எந்தப் பாவி துண்டித்தானோ ஒன்றும் தெரியவில்லையே. அப்பா மந்திரி இதோ இரதம் ஒன்று காணப்படுகிறது, நான் இதுவரையில் அந்த இரதத்தைப் பார்க்கவில்லை என்று சமீபத்தில் சென்று பார்க்க இரதத்திலிருக்கிற திரவியத்தை, திருடர்கள் எடுத்துப்போகும் அவசரத்தில் அவர்களுக்குத் தெரியாமல் இரண்டொரு ஆபரணங்களும் தங்க நாணயங்களும் கிடக்கிறதைக்

கண்டு பார்த்தையா மந்திரி ஏதோ திருடர்களுடைய காரியமாக யிருக்கவேண்டும், எல்லாவற்றிற்கும் மஹானை விசாரிப்போமென்று சொல்லி அவர் சமீபம் சென்று அவரைக் கிணற்றிலிருந்து வெளியில் எடுத்து பிரதக்ஷண நமஸ்காரம் செய்து அஞ்சலி பந்தனம் பண்ணிக்கொண்டு சுவாமி இதென்ன விபரீதம் வெகுபயங்கரமாகயிருக்கிறதே, தேவரீர் எவ்விடமிருக்கிறது, இதோ சமீபம் ஓர் இரதமிருக்கிறதே யார்கொடுத்தது, அதில் ஏதோசிறிது திரவியமிருக்கிறதே, இதென்ன! இன்னதென்று புலப்படவில்லையே, நடந்த விஷயமென்ன என்று மிக விநயத்துடன் கேட்க, ராஜனுடைய வாக்கியங்கள் ஒன்றும் செவியில் படாமல் மறுமொழிசொல்லாது மௌனமாயிருக்கிறதைக்கண்ட ராஜன் கைதட்டி ஹே சுவாமின் கண் திறந்து பார்க்கவேண்டும், கிருபைசெய்யவேண்டுமென்று பிரார்த்திக்க, ஜயதேவர் கண் திறந்து சமீபத்தில் நிற்கிற ராஜனைக் கண்டு அப்பா நீயார் அர்த்தராத்திரியில் ஆரணியத்தில வந்த காரணம் என்னவென்றார். அதற்கு ராஜன் ஹே சுவாமின் நான், எனது பரிவாரத்தோடு வேட்டைக்கு வந்தேன், சூரியன் அஸ்தமித்துவிட்டதால் ஊருக்குப் போக மார்க்கம் தெரியாது இந்த ஆரணியத்தில் தங்கி சாப்பாடு முதலானது செய்துகொண்டு பேசிக்கொண்டிருக்கையில் தேவரீர் சான்னித்தியமாயிருக்கிற இந்தயிடம் ஏக காலத்தில் கோடி சூரியன் பிரகாசித்தாற் போல் காணப்பட்டது. நான் புறப்பட்டு வந்து தேவரீரைச் சரணமடைந்தேன், இந்த இரதம் யாருடையது, நடந்த விஷயமென்னவென்று கேட்க, ஜயதேவர் புன்சிரிப்படைந்து அப்பா விசேஷம் யாதொன்றுமில்லை, இந்த இரதம் ஓர் வர்த்தகனால் கொடுக்கப்பட்டது, நான் இரதத்தில் ஏறிக்கொண்டு ஆரணியம் வந்ததும் அஸ்தமித்தது, சூரியன் உதயமானதும் ஊருக்குப் போகலாமென்று இவ்விடத்தில் தங்கினேன் என்றார். அதைக்கேட்ட ராஜன் ஆச்சரியமடைந்து ஆஹா மந்திரி பார்த்தாயா ஏதோ பிறரால் சில கபட காரியம் நடந்திருக்கிறது, சுகதுக்கம் சமானமாக எண்ணும் சுபாவகுண

முடையவராதலால் மறைத்துச்சொல்லுகிறார் என்று எண்ணி சுவாமி கர சரணாதி அவயவங்கள் துண்டித்திருப்பதற்குக் காரணமென்ன? யாராகிலும் துண்டித்தார்களா என்ன! என்று கேட்டதற்கு அப்பா ஒருவரும் துண்டிக்கவில்லை, பிறவியிலேயே கர சரணாதி அவயவங்கள் இல்லை என்றார். அதைக் கேட்ட அரசன் இவர் பகவத் பக்தராயிருக்கிறார் என்று நினைத்து அவரைத் தனது ஊருக்கு அழைத்துப்போய் பூஜை முதலானது செய்து சிம்மாசனத்தில் வீற்றிருக்கச்செய்து அவருக்கு ஏவல் தொழிலும் பரிசாரகத்தொழிலும் செய்வதற்காக அநேக வேலைக்காரர்களை நியமித்து மிகவும் ஜாக்கிரதையாய் கைங்கரியம் நடத்திக்கொண்டு வரும்படியாக கட்டளையிட்டான். அதற்கு அந்த வேலைக்காரர்கள் ஆஹா நாங்கள் இந்த மஹானுக்கு சிஸ்ருஷை செய்து வர என்ன புண்ணியம் செய்திருந்தோமோ, நாங்கள் பூர்வ ஜன்மத்தில் செய்த பூஜாபலன் இன்றைக்குச் சித்தியாச்சுது, எங்கள் ஜன்மம் கடைத்தேறியது, மகா பாக்கியம், கிருதார்த்தாளானோம் என்று ஒருவருக்கொருவர் ஆனந்தமாக சிஸ்ருஷை நடத்தி வந்தார்கள். ராஜாவும் பிரதிதினம அவரிடம் போய் அவருக்கு வேண்டியவைகளை தருவித்துக் கொடுக்கிறதும், தனது வேலைக்காரர்கள் கிரமமாகக் கைங்கரியம் நடத்தி வருகிறார்களா என்று பார்க்கிறதுமாய் ஒன்றும் குறைவில்லாமல் நடத்தி வந்தான்.

இவ்விதமிருக்கையில் ஒருநாள் அரசன் தனக்கு உபதேசம் செய்ய வேண்டுமென்றும், பகவானுடைய கிருபை தன் மேல் பூரணமாக உண்டாகும்படிச் செய்யவேண்டுமென்றும் பிரார்த்திக்க, அவ்விதமே ஜயதேவர் ராஜனுடைய பக்தி விசுவாசத்திற்கு மெச்சி உபதேசம் செய்து பின்னும் சொல்லுகிறார், ஹே ராஜன் சாக்ஷாத் கிருஷ்ணபகவானுக்கு சாதுக்களை பூஜை செய்கிறவர்களிடத்திலிருக்கிற கிருபை இலக்ஷ்மியிடத்தில் கூட இருக்கமாட்டாது ஆகையால் நீயும் சாதுக்களை பூஜித்தால்

பகவானுடைய கிருபை உண்டாகுமென்றார். ராஜன் ஜயதேவரைப் பார்த்து சாதுக்களென்பவர் யார், அவர்கள் எவ்விதமிருப்பார்கள்? அவர்களுடைய லக்ஷணமென்ன என்று கேட்டான். ஜயதேவர் ஹே ராஜன் சாதுக்கள் என்று சொல்லப்பட்டவர்கள் நெற்றியில் ஊர்த்த புண்டரமும், கழுத்தில் துளசிதள மாலேவும் துளசிமணி மாலேயும் தரித்து சதா காலமும் வாக்கில் பகவந்நாமம் ராமா, கிருஷ்ண, ஹே கோவிந்தாவென்று ஜபித்துக்கொண்டிருப்பார்கள் என்றார். அது முதல் சாதுக்கள், பாகவதர்கள், யாசகர்கள் எப்பேர்ப்பட்டவர்கள் வந்தாலும் அவர்களுக்குத் தகுந்த மரியாதை செய்கிறதும் யாசகர்களுக்கு வேண்டியவரையில் திரவியங் கொடுக்கிறதும் அன்னதானம், பூதானம், கன்னிகாதானம், முதலான சகல தானங்களும் செய்துகொண்டுவந்தான். சாதுக்கள் என்று யார் வந்தாலும் முதலில் ஜயதேவருடைய தரிசனம் செய்கிறதும் அவர்களுக்கு மரியாதை செய்து பிறகு ராஜனிடம் அனுப்புகிறதும ராஜன் அவர்களுக்கு வேண்டியவரையில் சம்மானம் செய்து அனுப்பி விடுகிற வழக்கமாயிருந்தது.

நிற்க, தேஜோமயமாய் விளங்குகிற ஜயதேவருடைய கை, கால் துண்டித்துப் பாழுங்கிணற்றில் தள்ளின திருடர்களிருவரும் விஞ்சதேசராஜன் யாசகர்களுக்கும் சாதுக்களுக்கும் ஏராளமான திரவியம் சம்மானம் செய்கிற சங்கதியைக் கேள்விப்பட்டு நாமும் பகவத் பக்தர்களைப்போல வேஷங்கொண்டு ராஜனிடம் போய் சம்மானம் வாங்கிக்கொண்டு வருவோமென்று உத்தேசித்து நெற்றியில் ஊர்த்தபுண்டரமும் கழுத்தில் துளசி மாலேயும், துளசிமணிமாலேயும் தரித்து வாக்கில் பகவானுடைய நாமஸ்மரணே செய்து கொண்டு ராஜாவுடைய அரண்மனேக்குச் சமீபத்தில் வந்து சேர்ந்தார்கள். ஆனல் ஜயதேவசுவாமிகள் ராஜாவுடைய அரண்மனேயிலிருக்கிறதும் ராஜாவைக் காணுதற்கு முன் ஜயதேவரைக் கண்டு அவரிடம் மரியாதை பெற்று

ராஜாவிடத்தில் போகவேண்டும் என்கிற சங்கதி திருடர்களிருவரும் அறியாதவர்களாய் ராஜாவைப் பார்க்க வேண்டுமென்கிற ஆவலோடு "ராம் ராம்" என்று நாமஸ்மரணை செய்துகொண்டு அட்டகாசத்தோடு அரண்மனையில் பிரவேசிக்கையில் சிம்மாசனத்தில் ஜயதேவர் உட்கார்ந்துகொண்டிருக்கிறதைப் பார்த்தார்கள். அப்போது அவர்கள் செய்து வந்த நாமஸ்மரணையால் உண்டான அட்டகாசம் யாவும் அடங்கித் தேகம் வெயர்த்து நடுநடுங்கி ஆஹா நாங்கள் அறியாமல் இவ்விடத்திற்கு வந்து விட்டோமே; இனி நாங்கள் எவ்விதமாகத் தப்பித்துக்கொண்டு போவோம், நிஷ்டையிலிருக்கிற ஜயதேவர் கண்ணைத் திறந்து பார்த்தால் ராஜனிடம் சொல்லி எங்களை சிக்ஷைசெய்வாரே, இதற்கு நாங்கள் செய்யத் தகுந்தது என்ன இருக்கிறது என்று விசனப்பட்டவர்களாய் ஒன்றுந் தோன்றாமல் ஸ்தம்பம் போல் திகைத்து நின்று விட்டார்கள். ஜீவகாருண்ணியமும் பரோபகார எண்ணமுமுள்ள ஜயதேவ சுவாமிகள் சிம்மாசனத்திலிருந்து சரேலென்று குதித்து ஓடிவந்து திருடர்களாகிய சாதுக்களை ஆலிங்கனம் பண்ணி ஹே சுவாமிகளே தேவரீருடைய தரிசனம் வர்த்தகனுடைய கிரகத்தில் கிடைத்ததற்கு இன்று பிராப்தமானீர்கள், நான் வெகு தன்னியனானேன் என்று சொல்லி மிகுந்த உபசாரத்துடன் அழைத்துப்போய் தமது சிம்மாசனத்தில் உட்காரவைத்து பூஜை முதலானது செய்து சுவாமி! நீங்களிரண்டு பேர்களும் இவ்விடத்திற்கு வர நானும் ராஜாவும் பூர்வ ஜன்மத்தில் என்ன தவம் புரிந்தோமோ, எங்களுடைய ஜன்மம் கிருதார்த்தமாயிற்று, இனி நீங்கள் ராஜாவிடத்தில் போங்களென்று சமீபமிருக்கிற சேவகர்களைப்பார்த்து அப்பா இந்த இரண்டு பேர்களும் பகவத்பக்தர்கள், மகா சாதுக்கள், இப்பேர்ப்பட்ட சாதுக்கள் இதுவரையில் இவ்விடத்திற்கு வந்ததில்லை, இனி வரப்போகிறதுமில்லை என்று ராஜாவிடத்தில் தெரிவித்து தகுந்த சம்மானம் செய்யும்படி சொல்லி வாருங்கள் என்றார்.

அவ்விதமே சேவகன் ராஜாவிடத்தில் சொல்ல, இராஜன் அந்த சாதுக்களை பயபக்தியோடு எதிர்கொண்டு அழைத்து வந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து பூஜை முதலானது செய்து சுவாமிகளே உங்கள் இஷ்டப்படி சுகமாயிருந்து என் கிரகத்தை பவித்திரம் செய்து என்னையும் கிருதார்த்தனாகச் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்து அநேக வேலைக்காரர்களை நியமித்து சிஸ்ருஷை செய்துவரும்படி திட்டஞ்செய்தான். கபட வேஷக்காரர்களாகிய சாதுக்கள் முன் ஜயதேவருக்குச் செய்த அபசாரத்தை நினைத்துத் தூண்டிலில் வைத்திருக்கிற இறைக்கு ஆசைப்பட்டு வந்து மடிகிற மச்சங்கள் போல ராஜா சாதுக்களுக்கு ஏதோ சம்மானம் கொடுக்கிறாரென்று ஆசைப்பட்டு வந்து அகப்பட்டுக்கொண்டோமே, இனி நாம் எவ்விதம் தப்பித்துக்கொள்ளப் போகிறோம், ராஜன் நியமித்த வேலைக்காரர்களால் செய்யப்பட்ட உபசாரம் நமக்கு அபசாரமாகவும், அவர்கள் பார்க்கிற பார்வை பயங்கரமாகவுமிருக்கிறதே, இனி நாம் என்ன செய்யப் போகிறோமென்று ஏக்கத்தோடு எவ்விதமும் நம்மைக்கொன்று விடப்போகிறார்கள், நமது பிராணன் கொடுக்கிறதற்காகவே இவ்விடம் வந்தோமென்று இரவும்பகலும் விசனப்பட்டு என்ன உபசாரஞ் செய்தபோதிலும் அவர்களுடைய சரீரம் செழிக்காமல் நாளுக்குநாள் மெலிந்துகொண்டே வந்தது, ராஜன் அவர்களைப் பார்த்து மிகவும் விசனமடைந்து ஜயதேவசுவாமியிடம் வந்து சுவாமி ஒரு மாதத்திற்கு முன்னதாக நம்முடைய அரண்மனைக்கு வந்த சாதுக்களை தேவரீர் எழுந்து உபசாரம் பண்ணினதல்லாமல் சம்மானம் பண்ணும்படி என்னிடத்திலும் அனுப்பினீர்கள், தேவரீருடைய ஆக்ஞைபடி எவ்வித உபசாரஞ்செய்து சௌக்கியமாக வைத்தாலும் அவர்களுடைய சரீரம் பெருக்காமல் நாளுக்குநாள் மெலிந்துகொண்டே வருகிறது, அது என்ன காரணமோ தெரியவில்லை என்றான். அதைக்கேட்ட ஜயதேவர் ராஜாவைப் பார்த்து ஹே ராஜா, அவர்கள் சாமான்னியர்கள் என்று நினையாதே, மஹானுபாவர்கள், மஹா விரக்தர்கள்,

காட்டில் சாகுபக்ஷணம் செய்யப்பட்டவர்கள், இல்லறவாழ்க்கையாகிய உன்னுடைய உபசாரமும், சட்ரஸபோஜனமும் அவர்களுக்கு ருசிக்கவில்லை, ஆதலால் அவர்கள் தேகம் மெலிந்து கொண்டுவருகிறதல்லாமல் வேறில்லை, அவர்கள் ஓரிடத்தில் தங்கப்பட்டவர்களல்ல, ஒரு மாதம் வரையில் அவர்கள் இவ்விடத்திலிருந்ததே உன்னுடைய பாக்கியம், அவர்கள் தம்மிடம் போகவேண்டுமென்று விரும்பினால் யாதொரு தடையும் செய்யாமல் வேண்டிய வரையில் சம்மானஞ் செய்து அனுப்பிவிடென்று ஆக்ஞாபித்தார். அவ்விதமே செய்கிறேனென்று ராஜன் ஒப்புக்கொண்டு தன்னுடைய அரண்மனைக்கு வந்து சேர்ந்தான். சிறிது நாள் சென்ற பிற்பாடு கபடவேஷக்காரர்களாகிய சாதுக்கள் ராஜனிடம் வந்து நாங்கள் உன்னிடத்திற்கு வந்து வெகு நாளாயிற்று, இனி இவ்விடத்திலிருக்கக்கூடாது, நமது இருப்பிடம் போய்ச்சேர விடை கொடுத்தனுப்பும் என்றார்கள். ராஜா அவர்களுக்கு சட்ரஸபோஜனம் முதலானது செய்வித்து உங்களுக்கு என்ன அபேக்ஷையோ அதைக் கேட்டால் கொடுக்கிறதற்குச் சித்தமாயிருக்கிறேனென்று சொல்ல, அவர்கள் எங்களுக்கு ஒரு அபேக்ஷையுமில்லை, நாங்கள் ஊருக்குப் போய்ச்சேருவதற்கு இரண்டு இரதமும் அதில் சிறிது திரவியமும் வைத்து அனுப்பினால் போதுமானது என்றார்கள். ராஜா அவர்களுக்காக இரதம் ஏற்படுத்தி அதில் ஏராளமான திரவியம், ஆடையாபரணம் முதலானது வைத்துச் சேனைகளையும் சற்று தூரம் போய் வரும்படி திட்டஞ்செய்து அனுப்பினான். அவர்கள் ஜயதேவரிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு சகலவித ஆடம்பரத்துடன் வனத்தின் வழி போகையில் சேவகர்கள் சாதுக்களை நோக்கிச் சுவாமி எங்கள் ராஜனிடம் இதுவரையில் அநேக கோடி யாசகர்கள், பகவத் பக்தர்கள், சாதுக்கள், வித்துவான்கள் வந்திருக்கிறார்கள், அவர்களுக்கெல்லாம் உங்களுக்கு நடந்தது போல் அவ்வளவு மரியாதையும் உபசாரமும் நடக்கவில்லையே, உங்களுக்கு மாத்திரம் ஜயதேவரால் மரியா

தையும் உபசாரமும் நடந்த காரணமென்னவென்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் ஒ சேவகர்களே ஓர் காலத்தில் அவிந்த தேசத்து ராஜனிடம் ஜயதேவ சுவாமி பிரதானியாகவும், நாங்கள் சேவகர்களாகவுமிருந்தோம்; அக்காலத்தில் ஒரு நாள் ஜயதேவர் எதோ செய்யத்தகாத குற்றம் செய்தாரென்று ராஜா கோபமடைந்து அவரை ஊருக்கு வெளியே கொண்டுபோய் சிரசாக்கினை செய்து வரும்படி எங்களுக்குக் கட்டளையிட்டு அனுப்பினர், நாங்கள் அவரை தொந்திரவு படுத்தாமல் பின் கட்டாகக் கட்டிக்கொண்டு ஆரண்யத்திற்குச் சென்று கொல்வதற்கு மனம் சகியாமல் இரண்டு கால் கைகளைத் துண்டித்துப் பாழும் கிணற்றில் தள்ளி விட்டுப் பட்டணம் போனால் ஜயதேவரை கொலை செய்யாமல் உயிரோடு விட்டு விட்ட செய்தியை ராஜன் கேள்விப்பட்டு நம்மை ஆக்கினைசெய்வானென்று பயந்து அன்று முதல் பட்டணம் போகாமல் விரக்தர்களாகத் திரிந்து கொண்டிருந்தோம், உங்கள் ராஜா சாதுக்களுக்கு சம்மானம் கொடுக்கிருனென்று கேள்விப்பட்டு வந்தோம்; வந்த விடத்தில் ஜயதேவருடைய தரிசனமும் கிடைத்தது, அவரும் நம்மைக் கண்ட மாத்திரத்தில் ஓர் காலத்தில் தன்னைக் காப்பாற்றினவர்கள் என்று நன்றி மறவாதவராய் எங்களுக்கு மரியாதை செய்ததல்லாமல் ராஜாவைக் கொண்டும் சம்மானஞ் செய்து வைத்தார் என்றார்கள். அந்த வார்த்தைகளைக் கேட்ட பூமிதேவி மனம் சகியாமல் பூமியானது படீலென்று வெடித்து இரண்டு இரதங்கள் அதற்குள் மூழ்கி விட்டது.

அது விஷயங்களெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த சேவகர்களும் மற்றுமுள்ள சேனைகளும் திகிலடைந்து ஊருக்குத் திரும்பி வந்து சாதுக்களைக் கொண்டு போய் விட்டு வரப்போனபோது அவ்விடத்தில் சாதுக்களுக்கும் சேவகர்களுக்கும் நடந்த சம்பாஷணையும், பிறகு நடந்த விஷயங்கள் யாவும் ஆதியோடந்தமாகச் சொன்னார்கள். அதைக்கேட்ட ஜயதேவ

சுவாமிகள் விசனமடைந்து கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருக விட்டுப் பகவானைக் குறித்து ஹே ஜனார்த்தனா, வாசுதேவா, அச்சுதா, ஆபத்பாந்தவா, பக்தவத்ஸலா, அனாத ரக்ஷகா, ஹே பாண்டுரங்கா எனது சத்துருக்களாகிய சாதுக்களை அநியாயமாய் பாதாளத்தில் சேர்த்து விட்டீரே, உம்முடைய சத்துருக்களில் எத்தனையோ அசுரர்களை இரக்ஷித்து உத்தமபதவி கொடுத்த நீர் ஏனோ என் சத்துருக்களை மாத்திரம இக்கெதிக்குள்ளாக்கினீர்? ஹே கபடநாடக சூத்திரதாரி! அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகா! என்னைக் காப்பாற்றவேண்டும் என்று பலவாறாக ஸ்தோதிரம் செய்கையில் வைகுண்டவாசியாகிய ஸ்ரீமந்நாராயணமூர்த்தி சங்கு சக்கிர பீதாம்பர தாரியாய் கருடாரூடராய் ஜயதேவருக்குப் பிரசன்னமாக, அவர் பகவானை பிரதக்ஷண நமஸ்காரம் செய்து தேகம் பரவசமானவராய் ஹே பதிதபாவனா, பரமதயாளு, கிருபாநிதே என்று ஸ்தோத்திரம் செய்ய, பகவான் ஹே ஜயதேவா என்னை ஸ்மரித்த காரணமென்ன? உனக்கு என்ன சங்கடம் நேர்ந்தது, அதைச் சொல்லுவாயாகில் அந்தச் சங்கடத்தினின்று விடுவிக்கிறேன் என்றார். ஜயதேவர் பகவானை நோக்கிச் சுவாமி என் சத்துருக்களாகிய இரண்டு சாதுக்கள் அரண்மனைக்கு வந்தார்கள்; நான் அவர்களை சிலகாலம் என்னிடத்தில் வைத்துக் கொண்டிருந்து பிறகு அவர்கள் சுதேசத்திற்குப் போகவேண்டுமென இச்சித்ததின் மேல் நான் அவர்களுக்காக இரண்டு இரதம் தயார் செய்து அதில் திரவியம் வைத்துப் பிரயாணத்திற்காக சேனையும் கொடுத்தனுப்பினேன்; நடுவழியில் சாதுக்களுக்கும் சேவகர்களுக்கும் நடந்த சம்பாஷணையில் சாதுக்கள் தகாத வார்த்தைகள் சொன்னமையால் பூமிதேவி பொறுக்காமல் வெடித்து இரண்டுஇரதங்களும் பூமிக்குள்போய்விட்டது; அவர்களை அந்த இரதத்தோடு மேலே எழுப்பித் தரவேண்டுமென்று பிரார்த்திக்க, பகவான் கிருபைகூர்ந்து ஜயதேவா நீ அந்த இரதங்கள் அமிழ்ந்திருக்குமிடம் சென்று பூமிதேவியை தியானித்

தால் அவள் அநுக்கிரகம் செய்வாள் என்றுரைத்து கால் கைகள் வளரும்படி ஆசிர்வதித்து அந்தர்த்தியானமாயினர். பிறகு ஜயதேவர் ராஜாவை அழைத்து ஹே ராஜன் சாதுக்கள் அமிழ்ந்து கிடக்கிற இடத்திற்குப்போகவேண்டும்; சீக்கிரத்தில் விருது முதலானவைகளையும் சேனைகளையும் தயார் செய் என, ராஜன் சேனைகளோடும் விருதுகளோடும் வந்து நிற்க, சகலரும் புறப்பட்டு சாதுக்கள் அமிழ்ந்திருக்கும் இடம் போய்ச் சேர்ந்தார்கள். உடனே ஜயதேவர் சேனை முதலானவைகளைத் தனியே விட்டு சாதுக்கள் அமிழ்ந்திருக்கிற இடத்திற்கு வந்து பூமிதேவியை ஸ்தோத்திரம் செய்ய, பூமியானது வெடித்து பூமிக்குள் அமிழ்ந்துகிடந்த சாதுக்கள் இரதத்தோடு வெளியே வந்து சேர்ந்தார்கள். அப்போது அவ்விடத்திலிருந்த சகலரும் பிரத்தியக்ஷமாகப் பார்க்க ஆகாசமார்க்கத்திலிருந்து ஓர் விமானம் வந்திறங்க, அந்த இரண்டு சாதுக்களும் ஜயதேவருக்கு பிரதக்ஷண நமஸ்காரஞ்செய்து ஹே ஜயதேவரே மஹா பாவிகளாயும் பகவத் பக்தர்களிடம் துவேஷம் வைத்த பரம சண்டாளர்களுமான எங்களுக்கு உத்தம மோக்ஷபதவி கிடைக்கும்படி செய்தீரே! உங்களுடைய பெருமையே பெருமை, ஜீவகாருண்ணியரென்றால் உமக்கேதகும்; உமது மகிமையைப்பற்றி வர்ணிக்கிறதற்கு பிரம்மாதி தேவர்களாலும் முடியாது. அப்படி இருக்க நாங்கள் எவ்விதம் வர்ணிக்கப் போகிறோம் என்று பலவிதமாக ஸ்தோத்திரஞ்செய்து விமானமேறி ஆகாசமார்க்கமாகச் சென்றார்கள்.

இவ்வைபோகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த அரசன் ஆச்சரியமடைந்து பிரமித்து ஜயதேவ சுவாமிகளைப் பார்த்துச் சுவாமி: விமானமேறிச் சென்றவர்கள் யார்? பூமியில் அமிழ்ந்திருந்த காரணமென்ன? இதற்கு முன் நடந்த விஷயமென்னவென்று கேட்க, அதற்கு அவர் தான் ஓர் காலத்தில் வர்த்தகனுல் அழைத்துக்கொண்டு போகப்பட்டதும், மறுபடி ஊரு

க்குத் திரும்பி வரும்போது இரதத்திலிருந்த திரவியத்திற்கு கபடவேஷ சாதுக்களாகிய இவர்கள் இரதத்தை பின்தொடர்ந்து வந்ததும், தான் இரதத்தை விட்டுக் கீழே இறங்கி முன்னே சென்றதும், பிறகு தன் கை கால் துண்டித்துப் பாழுங் கிணற்றில் தள்ளினதுமாகிய விஷயத்தை சவிஸ்தாரமாகச் சொன்னார். அதைக்கேட்ட ராஜா ஆச்சரியப்பட்டு ஜயதேவர் தமக்குத் தீங்கு செய்தவர்களுக்கு உத்தம மோக்ஷ சாதனம் உண்டாகும்படி கிருபை செய்தாரே; இவர் மகா ஞானி; மிகப் பெருமையுள்ளவரென்று எண்ணி அவரை முன்னிலும் அதிக மரியாதையாக வைத்திருந்தான்.

ஒருநாள் ராஜன் ஜயதேவரை நோக்கிச் சுவாமி தேவரீருடைய பத்தினி எனது தாயாருக்குச் சமானமாகையால் அந்த அம்மாளையும் தேவரீரையும் ஏகாசனத்தில் எழுந்தருளச் செய்து சோடசோபசாரத்துடன் பூஜை செய்து நேத்திரானந்தம் அடைய அபேக்ஷையோடிருக்கிற என் மனதை பூர்த்தி செய்விக்க வேண்டுமென்று மிக விநயத்துடன் பிரார்த்திக்க, ஜயதேவர் ராஜனுடைய பரம விசுவாசத்திற்கு மெச்சி பத்மாவதி அம்மாளை வரவழைக்கும்படி ஆக்ஞாபித்தார். ராஜன் சந்தோஷமடைந்து ஆனந்தக் கண்ணீர் பெருக விட்டு பத்மாவதி அம்மாளுக்குச் சிவிகை அனுப்பி அழைத்து வரச்செய்து தனது மனைபாள் அந்தப் புரத்திலிருக்கும்படியாக ஏற்பாடு செய்தான். ராஜஸ்திரி அம்மாளைக் கண்டு சந்தோஷமடைந்து பிரதக்ஷண நமஸ்காரஞ் செய்து கைலாகு கொடுத்து அழைத்துச் சென்று சிம்மாசனத்தில் எழுந்தருளச் செய்தாள். ராஜனும் ஜயதேவரும் அந்தப்புரம் செல்ல, ராஜன் பத்மாவதி அம்மாளை நமஸ்கரித்து சரணகமலங்களை சிரசில் வகித்து அம்மா எனது ஜன்மம் சுகிர்தமடைந்தது, வெகுநாளாக உங்களுடைய தரிசனத்துக்குக் காத்துக் கொண்டிருந்த எனக்கு இன்று சித்தியாச்சுது, வெகு தன்னியனுனேன் என்று சொல்ல, அம்மாள் ராஜனை

ஆசீர்வதித்துத் தமது பர்தா ஜயதேவரை நமஸ்கரித்து நின்றாள். அப்போது ஜயதேவர் மனையாளை நோக்கி நாயகி ராஜன் வேண்டு கோளுக்கிணங்கி உன்னை இவ்விடம் வரவழைத்தேன், ராஜ ஸ்திரியுடைய சிஸ்ருஷைக்குள் சிறிது காலமிருந்து ஊருக்கு போகலாமென்றார். ராஜன் பத்மாவதி அம்மாளைச் சேவித்து சகல ஆபரணங்களும் கொடுத்து அலங்கரிக்கச் செய்து பரி மள வஸ்துக்களாலும் புஷ்பங்களாலும் பூஜை செய்து தனது நாயகியை நோக்கி ஹே! சகி நான் தினந்தோறும் ஜயதேவரை பூஜை செய்கிறேன், நீ பத்மாவதி அம்மாளை பூஜை செய்யவே ண்டுமென்று ஏற்பாடு செய்தான். ராஜஸ்திரி கணவனுடைய ஆக்ஞையை சிரமேற்கொண்டு பத்மாவதி அம்மாளைப் பூஜித்து வருகையில், ஒருநாள் ராஜபத்தினி மற்ற சகிகளுடன் பத்மாவதி அம்மாளைச் சிம்மாசனத்தில் எழுந்தருளச்செய்து சோடசோப சாரத்துடன் பூஜை நடத்திக்கொண்டிருக்கையில ஓர் சேவகன் ராஜஸ்திரியிடம் ஓடிவந்து அம்மா என்னவென்று சொல்லுவேன், உங்கள் தம்பி திடீலென கீழே விழுந்து இறந் தார், அவருடைய உத்தம பத்தினி சககமனஞ் செய்தாள் என்றான். அதைக்கேட்ட ராஜபத்னி துக்கசாகரத்தில் மூழ்கி பூஜையை நிறுத்தி பத்மாவதி அம்மாளை நோக்கி அம்மா கேட் டீர்களோ அதிசயம், வெகு ஆச்சரியம், இக்காலத்திலும் இவ் வித செய்கை நடக்குமோ வென்று நினைக்கக் கூடியதாயிருக்கி றது; என் தம்பி மனைவி பதிவிரதா தர்மம் என்னவென்று சொல்லுவேன், மகா பதிவிரதை என்றால் அவளுக்கே உரித்தா கும், இக்கலியில் அவளைப் போல் பதிவிரதை மூன்று லோகத் திலும் கிடைக்க மாட்டார்கள் என்று சொல்லத் துணிவேன், அம்மா எனது தம்பி இறந்து அவனுடைய மனைவி சககமனம் செய்தாளாம், இதோ நிற்கின்ற சேவகன் சொல்லுகிறான், நான் செவி கொடுத்துக் கேட்டது முதல் தீராத்துபரமும், ஒரு பக் கம் ஆச்சரியமுமாயிருக்கிறது என்றாள். அதற்கு பத்மாவதி அம்மாள் குலுங்க நகைத்து என்ன துக்கம், என்ன ஆச்சரியம்,

உனக்கு ஆச்சரியமாகத் தோன்றுகிறது; எனக்கு சாமான்னிய மாக இருக்கிறது, ஏனென்றால் சகலத்தையும் துறந்து ஏழு ஜன்மமும் அவனையே பர்தாவாக அடைய விரும்புகிறவள் உத்தம பதிவிரதைகள், சககமனம் செய்ய வேண்டியதில்லை, உத்தம பதிவிரதை தனது பர்த்தாவுடைய பிராணவாயு நீங்கியதென்று கேட்ட மாத்திரத்தாலோ அல்லது பார்த்த மாத்திரத்தாலோ நாயகியுடைய பிராணவாயு நீங்கவேண்டும்; அப்பேர்ப்பட்ட ஸ்திரீகள் உத்தம பதிவிரதை என்று சொல்லப்படுவார்களேயல்லது வீணாக துர்மரணமாகிய சககமனம் செய்து வீண் பாவத்திற்குள்ளானாள் என்று சொல்லுகிற வார்த்தைகளைக் கேட்ட ராஜஸ்திரி மனம் பதைத்து ஆஹா பத்மாவதி அம்மாள் தான் மிக பதிவிரதை என்று அகம்பாவங் கொண்டவளாகவல்லவோ என்னை ராஜஸ்திரி என்று சிறிதும் மதியாது அலக்ஷியமாக பதில் சொன்னாள்; இவளை எவ்விதத்திலும் கர்வ பங்கம் செய்கிறேன், இவள் பதிவிரதா தர்மத்தை அறிகிறேன் என்று சொல்லி பிரதானியை அழைத்துத் தனக்கும் பத்மாவதி அம்மாளுக்கும் நடந்த நடவடிக்கைகள் யாவும் சொல்லி அப்பா அது விஷயம் பரிக்ஷை பார்க்கவேண்டுமாதலால் நீ இரகசியமாக ஓர் காரியம் செய்யவேண்டும், என்னவென்றால் மகாராஜா வேட்டைக்குப் போகும்போது ஜயதேவரும் கூடப் போவார், அவர்கள் இருவரும் வேட்டையாடிக் கொண்டிருக்கையில் தற்செயலாக ஜயதேவரை புலி தூக்கிக்கொண்டுபோய் விட்டதாக நான் பத்மாவதி அம்மாளை சிம்மாசனத்தில் உட்கார வைத்து சிச்ருஷை நடத்திக்கொண்டிருக்கும் சந்தர்பத்தில் கண்கள் நீர் தாரை தாரையாகப் பெருக என் முன்பாக வந்து விழுந்து அலறி மோதிக்கொண்டு நாவு குளற பெருமூச்சுவிட்டு ராஜாவும் ஜயதேவரும் வேட்டைக்குப் போனதில் ஆரண்யத்தில் ஜயதேவரை புலி தூக்கிப் போய்விட்டதென்று சொல், பிறகு என்ன நடக்கிறது வேடிக்கை பார்ப்போம், இதுகாரியம் நீ இரகசியமாகச் செய்யும் பக்ஷத்தில் மிக உபகாரமாயிருக்கும்

என்றாள். அதற்குப் பிரதானி சம்மதித்துச் சமயம் பார்த்துக் கொண்டிருக்கையில் ஒருநாள் ராஜனும் ஜயதேவரும் வேட்டைக்குப் புறப்பட்டுப் போனார்கள். அப்போது பிரதானி ராஜஸ்திரி சொன்ன விதமாகத் தான் செய்வதற்கு மனது துணியாது ஓர் சேவகனை அழைத்து ராஜஸ்திரி தன்னிடம் சொன்ன விஷயத்தை அவனிடஞ்சொல்லி அவ்விதம் செய்யவேண்டு மென்று ஆக்ஞாபித்து அனுப்பினான். சேவகன் அழுது புலம்பிக் கொண்டு நாவு குளற, மெய் நடுங்க அலறி மோதிக்கொண்டு ஓடோடியும் வந்து ராஜஸ்திரியின் முன்பாக விழுந்தான். ராஜஸ்திரி திகிலடைந்து சேவகனை நோக்கி என்னடா விஷயம், யாருக்கு என்ன சங்கடம் நேர்ந்தது என்றாள். அப்போது சேவகன் ராஜஸ்திரீயை நோக்கி அம்மா நான் என்ன சொல்லப் போகிறேன்; மெய் நடுங்குகிறது, இன்று மகாராஜாவும் ஜயதேவரும் வேட்டைக்குப் போனதில் ஜயதேவரை புலி தூக்கிப் போய் விட்டதென்று சொன்னான். அந்த வார்த்தயைக் கேட்ட ராஜஸ்திரி கபடமாகப் பெருங்குரலிட்டு ஓங்கி வளர்ந்த மரம் சாய்ந்து விழுவது போல் விழுந்து மூர்ச்சை அடந்தவள் போல் ஜாடை செய்தாள். பத்மாவதி அவளை மூர்ச்சை தெளிவித்து ஏனம்மா அழுகிறாய்? உனக்கு என்ன சங்கடம் நேரிட்டது? யாராகிலும் நிந்தித்தார்களா என்று அநேக விதமாகக் கேட்க, அம்மா நான் என்ன சொல்லப் போகிறேனென்று முன்னிலும் அதிக கூச்சலாய் அழத்தொடங்கினாள். அம்மாள் மிகவும் பயந்து ஏனம்மா உனக்கு ஏதாகிலும் ஆபத்து நேரிட்டு அதை வாய் விட்டுச் சொல்லமாட்டாமல் அழுகிறாயா என்னவென்று கேட்க, நான் எவ்விதம் சொல்வேனென்று பலவித ஜாடைகள் செய்து மனதை திடப்படுத்தினவள் போல் பாவனை செய்து அம்மா நேற்றையதினம் உமது பர்தாவும் ராஜாவும் வேட்டைக்குப் போன விடத்தில் உமது பர்தாவை புலி தூக்கிப் போய் விட்டதாக ஒரு சேவகன் சொல்லிப் போனானென்றாள். அதைக் கேட்ட பத்மாவதி அம்மாள் ஓங்கி வளர்ந்த மரமானது

அடியோடே சாய்ந்து விழுவது போல விழுந்து புஷ்பம் கசக்கின மாத்திரத்தில் மணம் நீங்குவது போல் ஆவென்ற சப்தத்தோடு பத்மாவதியின் பிராணன் நீங்கியது. அப்போது ராஜபத்தினி கையைப் பிசைந்து கொண்டு ராஜா வந்தவுடன் அம்மாள் எங்கே என்று கேட்டால் என்ன சொல்லுகிறது என்று விசனத்துடனிருக்கையில் வேட்டைக்குப் போயிருந்த ராஜாவும் ஜயதேவரும் வந்து சேர்ந்தார்கள். ராஜா அரண்மனை எப்போதும்போலிராமல் அமங்களமாயிருப்பதைப் பார்த்து ஒன்றுந் தோன்றாது திகைத்துப் பிரதானியை வரவழைத்துக் கேட்க, அவன் நடந்த விஷயத்தை சவிஸ்தாரமாகச் சொல்லக் கேட்ட ராஜா கொலையாளிகளை அழைத்துத் தன் நாயகியை சுண்ணாம்புக் காளவாயிலிடும்படி ஆக்ஞாபிக்குந் தருவாயில் சற்று ஆலோசித்து ஆ! பத்மாவதியை கொன்ற ஸ்திரீ ஹத்தியோடு நமது ஸ்திரீயைக் கொல்லும் தோஷமும் இவ்விரண்டு தோஷங்களும் நம்மைச் சேருமாகையால் நாமே பிராணன் விடுவது நலமென் நினைத்து அக்கினி வளர்க்கச் செய்து பிள்ளைகளை வரவழைத்து அவர்களுக்குப் புத்திமதிகள் சொல்லி அரண்மனையிலிருந்து வெளிவந்து சகலருக்கும் வந்தனஞ்சொல்லி அக்கினியை பிரதக்ஷணம் செய்து விழப்போகிற சமயத்தில் ஜயதேவர் நினைவு வந்து ஆஹா ஜயதேவரை சேவியாமல் அக்கினிப் பிரவேசம் செய்ய நினைத்தேனே என்று அவரிருக்கும் இடம் வந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து சுவாமி நான் பதிதனாகினேன், என்னால் பெருந்துன்பம் விளைந்தது என்றதைக் கேட்ட ஜயதேவர் ஞான திருஷ்டியால் சகலமும் தெரிந்து ஹே ராஜா நீ அக்கினிப்பிரவேசம் பண்ணவேண்டாமென்று பலவாறாகச் சொல்லித் தேற்றி, பிறகு ஜயதேவர் பத்மாவதி அம்மாள் நிர்ஜீவியாயிருக்கும் இடம் சென்று ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவைத் தியானஞ் செய்து இருபத்து நான்கு அஷ்டபதியை தியானஞ் செய்து ஹே ஆபத்பாந்தவா, என்னைரக்ஷியும்; இது தான் சமயமென்று ஸ்தோத்திரம் செய்ய, பாண்டுரங்கன் பிர

சன்னமாகி ஜயதேவரை மார்போடணைத்து அப்பா உன் அஷ்டபதியை மெச்சினேன்; நீ ஸ்மரித்த அஷ்டபதியை பக்தி விசுவாசத்தோடு யார் படிக்கிறார்களோ, அல்லது படிக்கக்கேட்கிறார்களோ அவர்களிடத்தில் சதாகாலமும் நான் இலக்ஷ்மி சமேதனாய் வாசம் செய்வேனென்று சொல்லி மறைந்தார். பிரேத சொரூபமாயிருந்த பத்மாவதி தூங்கி எழுந்தவள் போல எழுந்து சமீபத்தில் நிற்கின்ற தனது பர்தாவை பிரதக்ஷண நமஸ்காரஞ் செய்து வணங்கி நிற்க, ராஜா தன் ஸ்திரீ, குமாரன், பந்து ஜனங்களுடனும், வர்த்தகன் தன் குடும்ப சகிதமாயும், மற்றுமுள்ள ஜனங்களெல்லோரும் ஏகோபித்து ஜயதேவசுவாமிகளுக்கும், பத்மாவதி அம்மாளுக்கும் மங்களகரமாக தேவ துந்துபி முழங்க, தேவாதி தேவர்கள் புஷ்பம் வருஷிக்க பூஜை முதலானது செய்து ஆனந்தத்தில் மூழ்கித் தேகம் பரவசமானவர்களாய் வாழ்த்தினார்கள். இந்த திவ்விய சரித்திரம் படிக்கிறவர்கள், கேட்கிறவர்கள், அஷ்ட ஐசுவரியத்தைப் பெற்று முடிவில் உத்தம பதவி பெறுவார்கள்.

துளசிதாஸ் சரித்திரம்.

க்ஷீரசாகர வாசியாகிய ஸ்ரீமன் நாராயணமூர்த்தி வால்மீகரை நோக்கி ஹே வால்மீகரே நீர் பூலோகத்தில் அவதரித்து நீர் செய்த சமஸ்கிருத புராணத்தை பிராகிருத பாஷையில் எழுதிச் சகல ஜனங்களுக்கும் என் மேல் சிரத்தையும் பக்தியும் உண்டாகச் செய்யும்படி ஆக்ஞாபித்தார். அந்தப்படி அவர் அஸ்தினபுரியில பிராம்மண குலத்தில் தாருகனென்று சொல்லப்பட்ட ஆத்மாராமருக்குப் பிள்ளையாக அவதரித்தார். விதிப்படி அவருக்குப் பன்னிரெண்டாம் நாள் துளசிதாஸ் என்று பெயரிட்டு மிக அன்போடு வளர்த்து வந்தார்கள். அந்தச் சமயம் அஸ்தினபுரத்தில் ஆக்பர் பாதுஷா என்று ஒரு அரசன் ஆண்டு

கொண்டிருந்தான். அந்த அரசன் ஆத்மாராமரையும் துளசிதாஸரையும் நிரம்ப அன்பாகப் பாதுகாத்து வந்தான். இவ்விதமிருக்க, துளசிதாஸ் வயது பன்னிரெண்டடையவே மாதாதேவி என்ற ஓர் பெண்ணை விவாகஞ்செய்ய, சதிபுருஷரிருவரும் சிறிது நேரமாவது ஒருவரை ஒருவர் பிரியாது மிகுந்த அன்னியோன்னியமாக விருந்தார்கள். ஒருநாள் பாதுஷா சவாரி போக துளசிதாஸரும் அவரோடு புறப்பட்டுப் போனார். அந்த வேளையில் மாதாதேவி தாய் வீட்டிலிருந்து ஒரு சேவகன் உமது தாயாருக்கு உடம்பு அசௌக்கியமாயிருப்பதால் உம்மைப் பார்க்க வேண்டும் என அழைத்து வரச் சொன்னார்கள் என்றான். அதைக்கேட்ட மாதாதேவி விசனப்பட, சேவகன் அம்மா நீங்கள் ஏன் விசனப்படுகிறீர்கள், உங்கள் பர்தா உங்களைத் தாயார் வீட்டிற்கு வெகு நாளாய் அனுப்பவில்லையே என்றும், உங்களைப் பார்த்து வெகு நாளான காரணத்தாலும் உடம்பு அசௌக்கியமென்று சொல்லியனுப்பினால் நீங்கள் விருவீரென்று நினைத்து என்னை அனுப்பியிருக்கிறதாகத் தோன்றுகிறதென்றான். அதைக்கேட்ட மாதாதேவி விசனம் நீங்கி மாமனார் மாமியிடம் உத்திரவு பெற்றுத் தாய் வீடு போய்ச் சேர்ந்தாள். பாதுஷாவோடு போயிருந்த துளசிதாஸ் வீடு வந்து மாதாதேவியைக் காணாது தாயைக் கேட்க, அப்பா உனது மாமி அசௌக்கியமாயிருக்கிறதாகக் கேள்விப்பட்டு விசனித்து எங்கள் உத்திரவின் மேல் வந்த சேவகனோடு தாய் வீடு சேர்ந்தாளென்றாள். அதைக்கேட்ட துளசிதாஸ் சற்று நேரமாவது நாயகியைப் பிரியாதவர் அன்று பிரிந்தமையால் சாப்பிட, நித்திரை கொள்ளத்தோன்றாது நாயகி ஊரை நோக்கிப் புறப்பட்டு வழியில் வாய்க்கால்கள், ஆறுகளெல்லாம் தாண்டி இரவு பன்னிரெண்டு மணிக்கு மாமனார் வீடு போய்க்கதவைத் தட்டினார். ஏக காலத்தில் எல்லோருக்கும் நித்திரை வேளையாதலால் ஒருவரும் கதவு திறக்கவில்லை. துளசிதாஸ் தன்னாலானமட்டும் கதவைத் தட்டிப் பார்த்து எந்த வழியாவது உள்ளே போக

நினைத்து வீட்டைச் சுற்றி நாலு பக்கமும் பார்க்கச் சுவரின் மேல் ஒரு கொடிய சர்பமானது தன் தலையைச் சுவரின் மேலும் மற்ற பாகம் கீழேயும் தொங்கவிட்டிருக்கிறதை சர்ப்பமென்று நினையாது மதி மயங்கி நமது நாயகி நாம் வருவோமென்று கயிறு தொங்க விட்டிருக்கிறளென்று அதின் வாலைப் பிடித்துச் சுவரேறிக் குதித்து உட்சென்று மாதாதேவியை எழுப்ப, அவள் திடுக்கிட்டெழுந்து நீர் எவ்விதம் உள்ளே பிரவேசித்தீரென்று கேட்க, துளசிதாஸ் எனதன்புக்குரிய நாயகியே, நான் வெளியே போயிருக்கையில் நீ என்னைத் தனியாக விட்டு வந்தாயே என்று இராத்திரியே அநேக நதிகள் வாய்க்கால்கள் தாண்டி இவ்விடம் வந்து கதவைத் தட்டிக் கூப்பிட்டேன், ஒருவரும் திறக்கவில்லை, பிறகு எந்த வழியாவது உள்ளே போய்ச் சேர வேண்டுமென்று வீட்டைச் சுற்றி வர, என் பிரியநாயகியே நான் வருவேனென்று நீ கட்டித் தொங்கவிட்டிருக்கிற கயிற்றைப்பிடித்துச் சுவரேறிக் குதித்து உள்ளே பிரவேசித்தேனென்று சொன்னதைக் கேட்ட மாதாதேவி ஆச்சரியப்பட்டு கயிருவது கட்டவாவது, எங்கே அந்தக் கயிற்றைப் பார்ப்போமென்று ஒரு சேவகனை தீபங் கொண்டு வரச் செய்து பார்க்க, சர்ப்பத்தைக் கண்டு நடுநடுங்கி பிராணநாதரின் கையைப் பிடித்து ஹே நாதா, உமது மாதா பிதா முதலானவர்களை வீட்டில் தனியே விட்டுக் கேவலம் ஒரு பெண் விஷயமாக அர்த்த ராத்திரியில் ஆறுகளையும் வாய்க்கால்களையும் தாண்டி இவ்விடம் வந்து சர்ப்பத்தைப் பிடித்துச் சுவரேறிக் குதித்ததை யோசித்தால் உமக்குச் சிறிதும் புத்தியில்லை எனத் தோன்றுகிறது, நீர் சர்ப்பத்தின் வாலைப்பிடித்துச் சுவரேறும் போது அது உம்மை தீண்டிருந்தால் உமது கதி எவ்விதமிருக்கும்? இந்தச் சம்சாரம் மாயமாகிய ஒரு வலையாயிருக்கிறது, தேகம் அநித்தியம், நீரிற்குமிழியேயல்லது வேறில்லை. அப்படியிருக்க, நீர் அவிவேகத்தாலும், என் மேல் வைத்திருக்கிற மோகத்தாலும் மெய் மறந்து இன்னது செய்கிறேமென்று தெரியாமல் மதி மயங்கியிருக்கிற செய்கையை

இன்றேடே விட்டு விடும், விவேகத்தால் யோசித்துப் பார்த்தால் சகலமும் நாசமாகி மண்ணோடு மண்ணாகக் கலந்து விடுகிறதேயல்லாது வேறில்லை, ஆகையால் என் மீது மோகத்தால் வைத்திருக்கிற ஆசையில் பதினாயிரத்திலொரு பங்கு நிஜ பக்தியோடு சர்வாந்தர்யாமியாய், நிர்மலனாய், சர்வ பரிபூரணனாயிருக்கிற சாக்ஷாத் லட்சுமீபதியான ஸ்ரீமந்நாராயணமூர்த்தியிடத்தில் ஆசை வைத்தால் பூலோகத்தில் கீர்த்தியும், பர லோகத்தில் உத்தம பதவியுமடையலாம். ஸ்திரீகள் வலையில் புருஷர்கள் அகப்பட்டு அவஸ்தைப் படுகிறார்கள், இந்திரன் அகலிகையின் மேல் மோகித்து சாபத்தால் அவன் சரீரம் போன போக்கும், ராஜ ருஷியாகிய விசுவாமித்திரர் ஒரு அப்ஸர ஸ்திரீயின் மோகத்திலகப்பட்டு தபோமகிமையை நாசமாக்கிக்கொண்டதுமாகிய அனர்த்தங்களெல்லாம் ஸ்திரீகளாலே தானே உண்டாகியது, பூலோகத்தில் சகல ஜீவ ராசிகளும் தம் தம் ஆசையை தனத்தின் மேலும், வீட்டின் மேலும், மனைவி மக்கள் மேலும் வைத்து உண்பதும் உறங்குவது மாத்திரம் அறிந்தவர்களாய் சாக்ஷாத் ஸ்ரீராமனைக் கனவிலும் ஸ்மரிக்காமல் ஜனன மரணமென்கிற பாழும் கும்பியில் விழுந்து நாசமடைகிறார்கள், நாம் பூமியில் அவதரித்ததற்குச் சார்த்தகமாக பகவதாராதனை செய்து கடைத்தேற வேண்டுவதல்லாமல் சகல ஜனங்களுக்கும் பகவானுடைய மகிமையைப் பற்றிச் சொல்லி அவர்களை நல்ல மார்க்கத்தில் திருப்பவேண்டிய கடமை உம்முடையதாயிருக்க வீணாக ஸ்திரீ மோகத்திலகப்பட்டு அவஸ்தைப் படுகிறீரே என்று மாதாதேவி துளசிதாஸரைப் பார்த்துச் சொல்ல, துளசிதாஸருக்கு ஞாநோதயமாகி பூர்வ ஞானமடைந்தவராய் நல்லது! நல்லது!! நல்ல உபதேசஞ் செய்தாய் ஹே மாதாதேவி, இந்த உபகாரத்திற்குப் பிரதி உபகாரம் என்ன செய்யப் போகிறேன், குளத்தில் விழுந்து தத்தளிக்கிறவனைக் கரை ஏற்றினது போல நீ எனக்கு சற்குருவாகிக் கிருதார்த்தனாகச் செய்தாயென்று சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டு வெளிப்பட்டார்.

அப்போது துளசிதாஸர் தான் ஜன்மமெடுத்ததின் காரணம் ஞான திருஷ்டியாலறிந்து ஆஹா நாம் வால்மீகரல்லவோ, நாம் எதற்காக பூமியில் அவதரித்தோமோ அந்தக் காரியம் செய்வது அவசியமென நிச்சயம் பண்ணிக் காடுசென்று ஸ்ரீராமனைத் தியானம் செய்கையில் பிரதி தினம் காலை எழுந்து சவுசத்துக்குப் போய் காலலம்பி மிகுந்த ஜலம் சமீபமிருக்கிற ஒரு மரத்தடியில் கொட்டிப் பிறகு ஸ்நானஞ் செய்து ஜபதபாதிகளை முடித்து அடுத்த கிராமத்திற்குப் போய் பகவானுடைய சரித்திரத்தை எல்லோருங் கேட்டு ஆனந்திக்க வாசித்து, காட்டுக்குப் போய் பகவானைக் குறித்துத் தபசு பண்ணி வருகையில், ஒரு நாள் அவர் சவுசத்துக்குப் போய் காலலம்பி மிகுந்த ஜலத்தை வழக்கம் போல மரத்தடியில் கொட்டினர். கொட்டின மாத்திரத்தில் அவ்விடமிருந்து ஒரு பூதம் புறப்பட்டு ஹே துளசிதாஸ் நான் பிரம்ம ராக்ஷதன், நான் ஆறு, குளங்களில் இறங்கி தாகசாந்தி பண்ணக்கூடாதவனாய் நீர் கொட்டுகிற ஜலம் பானம் பண்ணித் தாகந்தீர்த்துச் சந்தோஷித்து உமக்குப் பிரசன்னமானேன் என்றது, அதற்கு துளசிதாஸர் ஆச்சரியப்பட்டு எனக்கு ஸ்ரீராமனுடைய தரிசனஞ் செய்விக்க வேண்டும் என, ஹே சுவாமி ஆஞ்சநேயரால் உமது எண்ணம் பூர்ணமாகும் என, துளசிதாஸ் புராண சிரவணஞ் செய்து ராக்ஷசன் சொன்னபடி ஆஞ்சநேயரைக் கண்டு சுவாமி ஸ்ரீராமனுடைய தரிசனம் செப்விக்க வேண்டுமென்று பிரார்த்தித்தார். ஆஞ்சநேயர் ஸ்ரீராமரிடத்தில் சென்று சர்ஷ்டாங்க தெண்டனிட்டு ஹேநாதா துளசிதாஸ், ஆச்ரமத்தில் தேவரீருடைய தரிசனத்திற்காகத் தபசு பண்ணுகிறார். தேவரீர் அவருக்குத் தரிசனம் கொடுத்துக் கிருபை பண்ணவேண்டுமென்று பிரார்த்திக்க, அவர் சம்மதித்து வானர சேனைகளும் துலுக்க ஜமேத்து கூட்டமாக ஆச்ரமத்தின் வழியாகப் போக சீதாராமன் போகிறாரென்று நினையாமல் துலுக்கன் கூட்டமாகப் போகிறானென்று பேசாமலிருந்து விட்டார். அப்போது ஆஞ்சநேயர் துளசிதாசரிடம் வந்து ஸ்ரீராம

ஸ்ரீபாண்டுரங்கா[illegible]

பூவைகுண்டமாகிய பண்டரி க்ஷேத்[illegible]மகிமையை சேர்ந்த 180 பகவத்பக்தர்களின் திவ்ய சரித்திரங்கள் மகாராஷ்டிரத்திலிருப்பதை தமிழ்படுத்தி 42 சரித்திரங்கள் வரையில் அச்சிட்டு பிரசுரித்ததில் தகுந்த ஆதரணையின்றி நின்றது. சத்விஷய சரித்திரங்களாதலால் எவ்விதத்திலும் முடிக்கவேண்டுமென்கிற எண்ணம் மேற்கொண்டு 1911 ௵ ஜனவரி முதல் ஆரம்பித்து சஞ்சிகை வெளிப்படுத்த வேண்டுமென்கிற எனது மனோபீஷ்டம் பூர்த்தியடைய சந்தா ரூ 2—0—0 கிருபை பண்ணி சஞ்சிகை (வாசிக்க, வாலிபர்களுக்கு வசன நடை பழக்கம், பெண்களுக்கு நல்லொழுக்கம், முதிர்ந்தோருக்கு ஞானமும் உண்டாக்கத்தக்கதானதால்) பெற்று ஆனந்தித்து இகபர சாதனமடைய கேட்டுக்கொள்ளுகிறேன்.

12 சந்தாதார்கள் சேர்த்து, வருஷ சந்தா 2 ரூபா வீத வசூல் செய்து விலாசத்துடன் அனுப்புகிறவர்களுக்கு 1 வரு சஞ்சிகை முழுவதும் அனுப்பப்படும். சந்தாதார்களுக்கு சர் துகை வசூல் செய்து அனுப்புகிறவர்கள் உத்திரவாதி. ச துகை சேர்த்து அவர்கள் விலாசத்துடன் அடியில் கண் ருக்கு அனுப்பவும்.

V. Srinivasa Row,

Publisher.

சென்னப்பட்ணம் திருவல்லிக்கேணி வேங்கடாசல செட்டி தெரு,
3/13-வது நெம்பர் வீடு ஸ்ரீநிவாச

சந்தா விகிதம்.

வருஷ சந்தா	...	...	...	2—0—
6-மாதம்	...	...	...	1—0—0
3-மாதம்	...	...	...	0—8—0

N.B.—V.P. மூலமாக அனுப்பப்படும்.

69.	ணகடசா	சரித்திரம்	110.	உத்தவசித்குணர்	சரித்திரம்
70.	சிவாஜி கம்ஸா	,,	111.	விஷோபாதாஸ்	,,
71.	நாவஜிமாலி	,,	112.	கோபிசந்ததாஸ்	,,
72.	விவேகசிந்து விப்பிரர்		113.	பாத்திரி ராஜா	,,
73.	லோஹகாப்பிராமணர்		114.	நாசசாது	,,
74.	விரத பிராம்மணர்	,,	115.	விட்டலதாஸ்	,,
75.	ஸ்ரீபாதசுவாமி	,,	116.	முராரிதேவு	,,
76.	லோகாம்புரோகிதர்		117.	ஜயமல்லராஜா	,,
77.	கொண்டோபா	,,	118.	சதுர்புஜராஜா	,,
78.	குபா பிராமணர்	,,	119.	பரசுராமர்	,,
79.	நரசிம்மமேதா	,,	120.	குபாகும்ப	,,
80.	டாகூர் ராமதாஸ்	,,	121.	நிம்பராஜார்	,,
81.	பிரம்மசாரி	,,	122.	வல்லபாசாரி	,,
82.	கலியாணர்	,,	123.	கோவிந்ததாஸ்	,,
83.	சூரதாஸ்	,,	124.	பிரேமநிதி	,,
84	நபாப்	,,	125.	பகவான்தாஸ்	,,
85.	சேனுநாவி	,,	126.	சனுதனுரூபா	,,
86.	சாத்விக ராஜா	,,	127.	மஹாஜனதாஸ்	,,
87.	கருமாபாயி	,,	128.	திரிலோசனதாஸ்	,,
8.	ஜனஜசாவந்தர்	,,	129.	அவந்தி துளசிதாஸ்	
.	சூரமணமோஹன்தாஸ்		130.	கானோபாத்திரி	,,
.	ரசிகமுராரி	,,	131.	பண்டரீ பிராமணர்	,,
	மீராபாயி	,,	132.	சக்குபாயி	,,
	கானோபாத்திரி	,,	133.	மாலோ பண்டிதர்	,,
	நாபாஜி பண்டிதர்		134.	பிரேமாபாயி	,,
	மிருத்யுஞ்சய	சரித்திரம்	135.	சிளாபாயி	,,
	பானுதாஸ்	,,	136.	மண்டலீகராஜா	,,
.	ராமராஜா	,,	137.	கபிலாபாயி	,,
7,	பயிரம்பட்டர்	,,	138.	ராமாபாயி	,,
3.	பிப்பாஜிராஜா	,,	139.	ராமராஜா	,,
.	முகுந்ததாஸ்	,,	140.	நரஹரிதாஸ்	,,
	போஜ்ஸலே	,,	141.	ஓகதாஸ்	,,
	ஹாவிப்சோனி	,,	142.	ஹரியானந்தர்	,,
	தாமணி மந்தர்	,,	143.	ராமசந்திர பட்டர்	
	ணேசதாஸ்	,,	144.	அககசா	,,
	கேசவ சுவாமி	,,	145.	ஸ்ரீதரர்	,,
	கோமாயி	,,	146.	ஹரிபாலர்	,,
.	லதீபுஷா	,,	147.	ஜேஸஹகாவு	,,
.	சந்தோபா	,,	148.	தஞஜாகோவு	,,
	சாபல் காம்விப்பிரர்	,,	149.	சுகானந்தர்	,,
	நீளோபா	,,	150.	மாதவதாஸ்	,,

மிகுதி நய்பர் அடுத்த சஞ்சிகையில் வரும்.